REGD. M. 4842

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 4-7-48 | இதழ் 3

தீவிரம் கொள்வீர்

[பாரதிதாசன்]

இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும்—இந்தத்
தேகமிருந்தொரு லாபமுண்டோ? (இந்)

விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி—அது
வீரத் தமிழ்மக்கள் ஆவி என்போம்.
இந்திக்குச் சலுகை தந்திடுவார்—அந்த
ஈனரைக் காறி யுமிழ்ந்திடுவோம்! (இந்)

இப்புவி தோன்றிய நாள் முதலாய்—எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டு காண்பீர்.
தப்பிழைத் தாரிங்கு வாழ்ந்ததில்லை—இந்தத்
தான்றோன்றி கட்கென்ன ஆணவமோ! (இந்)

எப்பக்கம் வந்து புகுந்து விடும்—இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?
அற்பமென்போம் அந்த இந்திதனை—அதன்
ஆதிக்கந் தன்னைப் புதைத்திடுவோம். (இந்)

எங்கள் உடல் பொருள் ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க்கீடில்லை என்றுரைப்போம்! (இந்)

சிங்கமென்ற இளங் காளைகளே—மிகத்
தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே!
பங்கம் விளைத்திடில் தாய் மொழிக்கே—உடற்
பச்சை ரத்தம் பரி மாறிடுவோம்! (இந்)

தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்த்
தூங்கி விழிப்பது நம் பிறப்புத்
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை! (இந்)

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—நமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
எங்கவிடோம் தமிழ்த் தாய்தனையே—உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை! (இந்)

இந்தியின் நிலைமை—காங்கிரஸ் கண்ணாடி மூலமே தெரிவது

—✻—

1939-ம் ஆண்டு ஜூன் மாதம் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானப்படி இந்தியா மொழி வழிப்படி பிரிக்கப்பட வேண்டும் என்பதற்கு குறிப்புத் தரப்பட்டுள்ளது. அதன்படி:—

வட்டாரம்	மொழி	தலைநகரம்
ஆந்திரா	தெலுங்கு	மதராஸ்
அசாம்	அசாமீஸ்	கௌகத்தி
பீகார்	இந்துஸ்தானி	பாட்னா
பெங்கால்	பெங்காளி	கல்கத்தா
பம்பாய் (நகரம்)	மராத்தி-குஜராத்தி	பம்பாய்
டில்லி	இந்துஸ்தானி	டில்லி
குஜராத்	குஜராத்தி	அகமதாபாத்
கர்னாடக்	கன்னடம்	தார்வார்
கேரளம்	மலையாளம்	கள்ளிக்கோட்டை
மகாகோசல்	இந்துஸ்தானி	ஜபல்பூர்
மகாராஷ்டிரம்	மராத்தி	பூனா
நாகபுரி	மராத்தி	நாக்பூர்
வடமேற்கு எல்லைப்புறம்	புஷ்ட்டு	பெஷாவர்
பஞ்சாப்	பாஞ்சாபி	லாகூர்
சிந்து	சிந்தி	கராச்சி
தமிழ்நாடு	தமிழ்	மதராஸ்
ஐ. மாகாணம்	இந்துஸ்தானி	லட்சுமணபுரி
உத்கால்	ஒரியா	கட்டாக்
விதர்ப்பா	மராத்தி	அகோலா

என 19 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் காங்கிரசின் தீர்மானத்தின்படி பார்ப்பதானாலும் பீகார், டில்லி, மகாகோசல், ஐக்கிய மாகாணம் ஆக நாலே வட்டாரங்கள் தான் இந்துஸ்தானியை மொழியாகக் கொண்டன என்பது விளங்குகிறது.

மற்ற 15 வட்டாரமும் வெவ்வேறு மொழிகளே பெற்றுள்ளன.

எனவே இந்த 4 வட்டாரமொழியை, பிற வட்டாரங்கள் மீது சுமத்துவது அடுக்குமா?

இந்துஸ்தானி தான் இந்தியாவில் பெரும்பாலான மக்கள் பேசுவது என்று கூறுவது புள்ளி விவரத்தின்படி நிலைக்கக்கூடிய வாதமா? காங்கிரஸ் கணக்குப்படியே 19 வட்டாரத்திற்கு 4 வட்டாரம் தானே இந்துஸ்தானி மொழி கொண்டன?

அங்ஙனமிருக்க அம்மொழி எப்படி இந்தியப் பொதுமொழியாகும்?

இந்தி பொதுமொழியாக

4-ம் பக்கத் தொடர்ச்சி

அவற்றின் வழிச்சென்ற மயக்க வறிவினராகையாலும்; உயிர்க் கொலை, ஊனுணவு, கட்குடி, பல சிறு தெய்வ வணக்கம், பலசாதி வேற்றுமை முதலான பொல்லா ஒழுக்கங்களை அகத்தடக்கிய ஆரிய நூலநெறிகளைத் தழுவிய வடவர், அவற்றை விளக்கி அருளொழுக்கத்தையும் முழுமுதற் கடவுள் வணக்கத்தையும் வற்புறுத்தும் அருந்தமிழ் நூல்நெறிகளைத் தழுவாமையாலும்; அவருடைய மொழிகளையும், அவற்றின்கட் புதிது தோன்றிய நூல்களையும் நந்தமிழ் மக்கள் பயிலுதலால், இவர்கள் எதொரு நலனும் பயனும் எய்தார் என்பது இனிது பெறப்படும்.

இங்ஙனம் எல்லா வகையாலுஞ் சிறந்த தமிழ்மொழி இவ்விந்திய நாடு முழுமைக்கும் பொது மொழியாதற்குரிய நலங்கள் எல்லாம் வாய்ந்ததாயிருந்தும், அதனைப் பொதுமொழியாக்க முயலாமல், நானூறு ஐந்நூறு ஆண்டுகளாகவே தோன்றிப் பழைய சிறந்த நூற்செல்வமின்றி வறியனவாய்ப் பல வகைக் குறைபாடுகள் உடையனவாய்ப், பெரும்பாலும் நாகரிகமில்லா வடவர்களாற் பேசப்படும் இந்தி முதலான சிதைவுக் கலப்புமொழிகளை இத்தேயத்திற்குப் பொது மொழியாக்க வேண்டுமென்று கூக்குரலிட்டு முயல்வோர் உண்மையான தொண்டர்களாவரா வென்பதனை அறிவுடையோர் ஆழ்ந்து நினைத்துப் பார்த்தல் வேண்டும். இதுகாறுங் காட்டிய உண்மைகளால் இந்தி மொழிப் பயிற்சி நந்தமிழ் நாட்டிற்கு ஒரு சிறிதும் பயன்படாமையினை யறிந்து, அதன் பயிற்சியினைத் தடைசெய்து, நம் தனித் தமிழ்ப் பயிற்சியினையே எங்கும் பரவச் செய்து நந்தமிழ் மக்களைத் தம் தாய்மொழி யறிவில் விளங்கச் செய்வார்களாக!

✻

அறிவிப்பு

மதுரை நகர் "திராவிட நாடு" சந்தாதாரர்கள் தங்கள் பாக்கியைச் செலுத்தி, 1—7—48 முதல் நகரில் இருக்கும் வெற்றிலை பாக்குக் கடைகளில் பத்திரிகையை வாங்கிக் கொள்ளவும்.

M. S. இராமைய்யா,
ஏஜண்டு.

இந்தி, பொதுமொழியாக முடியாது

இக்கட்டுரை, பேராசிரியர் மறைமலையடிகளாரால் "இந்தி பொது மொழியா" என்று எழுதப்பட்ட நூலின் சுருக்கமாகும். இதனை அறிவுக் கண்கொண்டு படிப்பவர் எவரும் இவ்வேண்டா இந்தியைவலிந்து கட்டாய பாடமாக்கும் கருத்தழிவு வேலையில் இறங்கமாட்டார்கள் என்பது எமது துணிபு.

"இவ்விந்திய நாட்டின் வடக்கே பல ஊர்களிற் பலவகை மாறுதல்களுடன் பேசப்படும் 'இந்தி' மொழியை, இவ்விந்திய நாடு முழுதுமுள்ள மக்கள் எல்லாரும் பயின்று அதனையே பொது மொழியாக வழங்கிவரல் வேண்டுமென்று, இந்நாட்டின் நன்மைக்காக உழைக்கும் வடநாட்டு அறிஞர் பலருந் தென்னாட்டறிஞர் சிலரும் பேசியும் எழுதியும் வருவதுடன் ஆங்காங்கு இந்தி மொழிப் பள்ளிக்கூடங்களுந் திறப்பித்து நடத்திவருகின்றார்கள். ஆகையால் இந்திமொழி நம் நாட்டவர்க்கு நன்மை செய்யத்தக்க நலனும் ஆற்றலும் உடையதுதானா என்பதனை முதற்கண் ஆராய்வோம்.

இப்போது, ஆங்கிலக்கல்விக்கழகங்களிற் கல்வி பயின்று வெளிவரும் நம் இந்திய மக்களிற் பெரும்பாலர் பொருள் வருவாய்க்கு வேண்டுமளவு சிறிது ஆங்கிலம் பயின்றவராயும், அதனோடு சேர்த்துச் சிறிதே கற்பிக்கப்பட்ட தமிழ் முதலான மொழிகளைத் தப்புந்தவறுமாய்ப் பேச எழுதத் தெரிந்தவராயும் வெறும் போலி வாழ்க்கையிற் சில்லாண்டுகளே உயிர் வாழ்ந்தொழிதலால், இந்நாட்டின்கட் பெருந்தொகையினராய் வெற்றுயிர் வாழ்க்கை செலுத்துங் கல்லா மாந்தர்க்குந், தமிழ் முதலான நாட்டு மொழிகளை வருந்திக் கற்றும் வறியராய்க் கார்த்திகைப் பிறைபோல் ஆங்காங்குச் சிதறிச் சிற்சிலராய்க் காலங்கழிக்குந் தாய்மொழி கற்ற மாந்தர்க்கும், ஆங்கிலங் கற்றவரால் மிகுதியான பயன் ஏதும் விளைகின்றிலது. இப்படியிருக்க, இத்தமிழ் நாட்டிலும், பிறமொழி பேசும் பிறநாடுகளிலும் அயல் மொழியான இந்தி மொழிப் பயிற்சியை நுழைத்தால் அதனாற் பயன் விளையுமோ என்பதனை அறிஞர்கள் ஆழ்ந்தாராய்ந்து பார்த்தல் வேண்டும்.

இவ்விந்திய தேயத்தின் பற்பல நாடுகளிலும் உயிர் வாழும் மாந்தர்கள், பற்பல மொழிகளைப் பேசுவாராய் இருத்தலின், இந்நாட்டவரெல்லாரும் ஒரு பொது நன்மையின் பொருட்டு ஒருங்கு கூடிப் பேச வேண்டிய காலங்களில் இந்தியை அவரெல்லாரும் பொது மொழியாய்க் கையாளுதலே நன்று என்று தேயத் தொண்டர் சிலர் கூறுகின்றனர். இவரது கூற்றுப் பொருந்தாதென்பது காட்டுவோம்

இந்தி மொழியானது வடக்கே பற்பல நாடுகளிற் பற்பல மாறுதல்களோடு பேசப்படுகின்றதேயல்லாமல், அஃதெங்கும் ஓரே வகையாகப் பேசப்படவில்லை. இங்ஙனம்பலவகை மாறுதல்களுடன் பேசப்படும் இந்தி மொழியை ஆராய்ச்சி செய்த ஆசிரியர்கள் அதனை 'மேல்நாட்டு இந்தி' 'கீழ் நாட்டு இந்தி' 'பிகாரி' என்னும் மூன்று பெரும்பிரிவுகளாகவும், அப்பெரும் பிரிவுகளினுள்ளே முறையே 'பாங்காரு,' பிரஜ்பாஷா, 'கனோஜ்' 'பத்தேலி' உருது; 'அவதி' 'பகேலி' 'சத்தீஸ்கரி'; 'மைதிலி', 'போஜ்புரி, 'மகதி'; என்னும் பல சிறு பிரிவுகளாகவும் பகுத்திருக்கின்றனர். இன்னும் இந்திமொழியின் பிரிவுகளாகப் பேசப்படுஞ் சிறுசிறு மொழிகள் மேலும் பற்பலஉள. இவ்வாறு இந்தி மொழியின் பல பிரிவுகளாக வழங்கும் பற்பல மொழிகளைப் பேசும் பற்பல நாடுகளில் உள்ளாரும், ஒரு நாட்டவர் மொழியை மற்ற நாட்டவர் அறியாராய் உயிர் வாழ்ந்து வருதலின், இந்தி அவரெல்லார்க்கும் தெரிந்த பொதுமொழி என்றுரைப்பாருரை எங்ஙனம் பொருந்தும்? இங்ஙனம் பற்பல நாடுகளில் பற்பல மாறுதல்களுடன் வழங்கும் பல்வேறு இந்தி மொழிகளில் எதனை இத்தென்னாட்டவர் கற்றுத்தேர்வது? எதனை இவர் கற்றாலும் அதனுதவி கொண்டு இவர் வடநாட்டவரெல்லாரோடும் பேசுதல் இயலுமா? இயலாதே. மேற்குறித்த இந்தி மொழிகளேயன்றிச், 'சிந்தி','லந்தி', 'பஞ்சாபி', 'குஜராத்தி', 'ராஜபுதானி'; 'குமோனி', 'கடுவாலி', 'நேபாலி', 'உரியா', 'பங்காளி', 'மராட்டி', 'சிணு', 'காஸ்மீரி', 'கோகிஸ்தானி', 'சித்ராலி', 'திராகி', 'பஷை', 'கலாஷா', 'கவர்பாவ' முதலான இன்னும் எத்தனையோ பல மொழிகளும் வடக்கே பற்பல நாட்டின்கண்ணுள்ள பற்பல மாந்தர்களாலும் பேசப்பட்டு வருகின்றன. இம்மக்கட் பெருங் கூட்டத்துடனெல்லார், இந்தி மொழியில் ஒன்றை மட்டுந் தெரிந்த தென்னாட்டவர் உரையாடி அளவளாவுதல் கூடுமோ? சிறிதுங் கூடாதே; வடநாட்டவரிலேயே இந்தி மொழியை அறியாமற் பல திறப்பட்ட பன்மொழிகளை வழங்கும் மக்கட் கூட்டம் பலவாயிருக்க, இத்தென்னாட்டவர் மட்டும் இந்தி மொழியைக் கற்றுப் பேசுதலால் யாது பயன் விளைந்திடக்கூடும்? இவ்வியல்புகளையெல்லாம் நடுநின்று எண்ணிப் பார்க்கவல்ல அறிஞர்க்கு, இத்தென்னாட்டவர்கள் தமக்கு எவ்வகையிலும் பயன்படாததுந் தெரியாததுமான இந்தி மொழிகளில் ஒன்றைப் பொதுமொழியென வருந்திக் கற்றலால் வீண் காலக் கழிவும் வீண் உழைப்பும் வீண் செலவும் உண்டாகுமேயல்லாமல் வேறேதொரு நன்மையும் பயனும் உண்டாகாதென்பது நன்கு விளங்கும்.

இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுத் தமிழ் மொழியை நன்கு கற்ற ஆசிரியர்கள் முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை, பெரும்பரிபாடல், தொல்காப்பியம் பெருங்கலித்தொகை, குருகு. வெண்டாளி, வியாழமாலை, முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, பதிற்றுப் பத்து, எழுபது பரிபாடல் குறுங்கலி, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்கோவையார், சீவகசிந்தாமணி முதலான அரும்பெருந்தமிழ் இலக்கண இலக்கிய விட்டுநூல்களும், அவைதமக்குச் சொற்பொருள் நுட்பமுஞ் சுவையும் மலிந்த சிற்றுரை பேருரைகளும் இயற்றித், தமிழை மாறாத நாகரிக இளமை வளத்தில் இன்றுகாறும் இனிது வழங்கச் செய்து வரு

லால், அதனை வழங்குந் தமிழ்மக்க ளெல்லாருந் ஒருவர் ஒருவர்க்கு நெடுந்தொலைவில் இருப்பினும் அதனாற் பேசியும் எழுதியும் அளவளாவி ஓரிடத்திலுள்ள ஒரே மக்களினம் போல் உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

மற்று, இந்தி, உருது முதலான வடநாட்டு மொழிகளோ தமிழைப் போற் பழைமையானவைகள் அல்ல; மகம்மதிய மதத்தவரான மொகலாய அரசர்கள் வடநாட்டின்மேற் படையெடுத்துப் போந்து, தில்லிப் பட்டினத்தைத் தலைநகராய்க் கைக்கொண்டு, அதன்கண் அரசு வீற்றிருக்கத் துவங்கிய பின்னரே அம்மொழிகள் தோன்றியனவாகும். அக்காலத்தில் தில்லி நகரிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பிராகிருதச் சிதைவான ஒருமொழி வழங்கிக் கொண்டிருந்தது. தில்லியில் துலுக்கரரசு நிலைபெற்றபின், அவர் கொணர்ந்த அராபிமொழி பாரசீக மொழிச் சொற்கள் அம்மொழியின்கண் ஏராளமாய்க் கலக்கப்பெற்று அவரால் அஃது உருது எனவும் பெயர் பெறலாயிற்று.

இதன்பின் நூல் வழக்குடையதாய் இஞ்ஞான்று வழங்கும் இந்தி மொழியானது 'லல்லுஜிலால்' என்பவரால் உருது மொழியினின்றும் பிரித்துச் சீர்திருத்தஞ் செய்யப்பட்டதொன்றாகும். இதற்குமுன் உள்ளதான பிராகிருதச் சிதைவு மொழியிற் கலந்த பாரசிக அராபிச் சொற்களை அறவேயொழித்துச் சமஸ்கிருத மொழிச் சொற்களை மிகுதியாய் எடுத்துச்சேர்த்து அவர் இந்திமொழியைப் புதிதாய் உண்டாக்கினர். ஆகவே, வடசொற் கலப்பினால் ஆக்கப்பட்டுச் சிறிது காலமாக இப்போது நூல் வழக்கிற் கொணரப்பட்டிருக்கும் இந்தி மொழியை நாம் தென்னாட்டவர் கற்றுத்தெரிந்து கொள்வதனால், இவர் வடநாட்டவரெல்லாருடனும் பேசி அளவளாவிடக்கூடும் என்று சிலர் மடிகட்டி நின்று கூறுவது, நம்னோரை ஏமாற்றும் பொய்யுரையேயாம்.

கி. பி. 1400-ம் ஆண்டு முதல் 1470-ம் ஆண்டு வரையில், அதாவது இற்றைக்கு 467 ஆண்டுகளுக்குமுன்னிருந்த, 'இராமானந்தர்' எனப் பெயரிய துறவி இராமனையே முழுமுதற் கடவுளாக வைத்து வழிபடல் வேண்டுமென்ற கொள்கையை வடநாட்டில் பல இடங்களிலும் பரவச் செய்து வந்தார். இவர் இராமன் மேற்பாடிய பாடல்கள் தாம் முதன்முதல் இந்தி மொழி நூல் 'ஆதி கிரந்தம்' என வழங்கப்படுகின்றது.

இனி, இராமானந்தர்க்குப் பின் அவர் தம் மாணக்கருள் ஒருவரான கபீர்தாசர் என்பவர், கடவுள் பல பிறவிகள் எடுத்தார் எனக்கூறுவது அடாதென்றும், இறைவனைக் கல் செம்பு கட்டை வடிவில் வைத்து வணங்குதல் பெருங்குற்றமாமென்றும், இந்து சமயக்கிரியைகளுஞ் சடங்குகளும் பொருளற்ற புன்செயல்களென்றும், இந்திமொழியின் ஒரு பிரிவான 'அவதி' மொழியிற் பாடல்களைப் பாடியிருக்கின்றார்.

இனிக், கபீர்தாசருக்குப் பின் அவர் தம் மாணக்கரான 'நானக்' என்பவர் தம் பாடல்களைப் பஞ்சாபியும் இந்தியும் கலந்த கலப்புமொழியில் அமைத்துச் 'சீக்கிய' மதத்தைப் பரப்பினர்.

இனி, இற்றைக்கு 480 ஆண்டுகளுக்குமுன், தர்பங்கா மாகாணத்தின் கண்ணதான 'பிசபி' என்னும் ஊரில் 'வித்யாபதி தாகூர்' என்ற வைணவர் ஒருவர் இந்திமொழியின் மற்றொரு பிரிவான 'மைதிலி'மொழியில் கண்ணனுக்கும் அவன் காதலி இராதைக்கும் இடையே நிகழ்ந்த காதல் நிகழ்ச்சிகளை விரித்துப் பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். இப்பாடல்களையே பின்னர்ப் 'பங்காளி' மொழியில் 'சைதன்யர்' என்பார் மொழி பெயர்த்து, அவற்றை வங்காள தேயமெங்கும் பரவவைத்தார். இதுகொண்டு, இந்திமொழிவங்காள தேயத்திலுள்ளார்க்குள் வழங்காமை அறியப்படுகின்றதன்றோ? வடநாட்டிற் பெரும்பரப்பினதான வங்காள தேயத்தார்க்கே தெரியாததான இந்தி மொழியைத் தென்னாட்டிலுள்ளவர்கள் பயின்றாலும், இவர்கள் வங்காள மக்களுடன் அதிற்பேசி உறவாட முடியாதன்றோ?

ஆதலால், இதுவரையிற் கூறியது கொண்டு, இந்தி மொழியானது 500 ஆண்டுகளுக்கு முன் நூல் வழக்கில்லாமற், கல்வியறிவில்லா வடநாட்டு மக்களால் அந்நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு திரித்துப் பேசப்பட்டு, ஒருபாலார் பேசும் மொழி மற்றொருபாலார்க்குத் தெரியாத வண்ணம் வழங்கினமையால், அஃது இஞ்ஞான்றுங் கூடப் பற்பல மொழிகளாகவே பிரிந்து வழங்குகின்றதென்பதும், அதனால் இந்தியை வடநாட்டவர் எல்லார்க்கும் பொது மொழியெனக் கூறுவாருரை மெய்யாகாதென்பதும், ஆகவே தென்னாட்டவர் இந்தியைப் பயிலுதலால் அதனுதவி கொண்டு வடநாட்டவரெல்லாரோடும் உரையாடி உறவாடல் இயலாதென்பதும் நன்கு விளங்கா நிற்கும்.

இனி, இந்தி மொழிகள் நாலு கோடி மக்களாற் பேசப்படுதலாகிய தொகை மிகுதியை வற்புறுத்திக் காட்டுவார்க்கு, வங்காளமொழி ஐந்துகோடி மக்களாலும், தமிழுந் தமிழோடினமான மொழிகளும் ஆறு கோடி மக்களாலும் பேசப்படும் பெருந்தொகை எடுத்துக் காட்டப்படும். இந்தியைப் பொது மொழியாக்க வேண்டுமென்று ஒரு சாரார் கூறுவரேல், அதனினும் பெருந்தொகையினரான மக்களாற் பேசப்படும் 'வங்காள' மொழியைப் பொதுமொழியாக்கவேண்டுமென்று வங்காளரும், இவ்விந்திய நாட்டின் நால் எல்லை வரையிலும் பரவியிருக்குந் திராவிட மக்கள் எல்லார்க்கும் முதன்மொழியாவதும், இந்தியாவில் மட்டுமேயன்றி இலங்கை, பர்மா, மலாய்நாடு, தென் ஆப்பிரிக்கா முதலான நாடுகளிற் குடியேறி, வாணிக வாழ்க்கையிற் சிறந்தாராயிருக்குந் தமிழ் மக்கள் அனைவராலும் வழங்கப்படுவதும் ஆன தமிழையேபொது மொழியாகப் பயிலல் வேண்டுமென நந்தமிழ் மக்களும் வலியுறுத்துவரல்லரோ? மேலும், வடநாட்டு இந்தி முதலான மொழிகளின் பாடல்களிற் பெரும்பாலன, நம்போற் பல பிறவிகள் எடுத்துழன்று இறந்துபோன சிற்றரசர்களான இராமன், கிருஷ்ணன், பலராமன், வசுதேவன் முதலானவர்களைக் கடவுளாக வைத்து உயர்த்துப் பாடப்பட்டிருக்கின்றன. அதுவல்லாமலும், இந்தி முதலான வடநாட்டு மொழிகள், தமிழைப்போற் பழையன அல்லாமையாலும், அவற்றை வழங்கும் மக்கள் பழமைதொட்டு நாகரிக வாழ்க்கையில் வாழ்ந்த தமிழ் மக்களைப்போல் நாகரிக வாழ்வு வாயாதவர்களாகையாலும்; சென்ற 400 அல்லது 500 ஆண்டுகளாகத் தோன்றிய வடநாட்டுப் புலவர்கள் பலரும், பண்டுதொட்டுத் தனித்த பேரறிவு வாய்ந்த தமிழ்ப் பெரும்புலவர்போலாது, சமஸ்கிருத புராணப் பொய்க்கதைகளை நம்பி

(7-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டில் மொழிப்பற்று வளர்ந்துவிட்டது

15-ம் பக்கத் தொடர்ச்சி

வாக்குக் கூறி, நான் உமக்கு ஊழியம் செய்யவே அனுமதி கேட்கிறேனே ஒழிய, ஊராளும் பதவியா கேட்கிறேன் என்று உள்ளம் உருக்கும் பேச்சுப் பேசி, பதவியில் அமர்ந்துகொண்டதும், தமக்கும் பதவிக்கும் ஏதோ பாரம்பரை பாத்யதை இருப்பது போல எண்ணிக் கொண்டு, பிடி! அடி! சுடு! என்று பிதற்றிக் கொண்டு, யார் எத்தகைய நியாயமான விஷயத்தைச் சொன்னாலும், நீதிக்காக வாதாடினாலும் அவர்கள் மீது அடக்கு முறையை வீசி, அட்டகாச வாழ்வு நடாத்தியதால், அவதியுற்று அழிந்த பல ஆளவந்தார்களின் தொகுப்புநூல், சரிதம் ஆளவருவோருக்கு, அற்புதமான வழிகாட்டி—எச்சரிக்கை-ஒரு வரலாறு. ஆனால், நமது ஆட்சியாளர்கள், நாள் தவறாமல் 'இந்தியன் பினல் கோடை'ப் புரட்டிப் புரட்டிப் பார்த்து, யாரார் மீது என்னென்ன செக்ஷன் வீசலாம், எந்தெந்தப் பத்திரிகைக்கு ஜாமீன்கேட்கலாம், எங்கெங்கு தடை உத்தரவுகள் பிறப்பிக்கலாம் என்று படித்துத் தெரிந்து கொள்வதிலே அக்கறை காட்டுகிறார்களே தவிர, உலக வரலாற்றுச் சுவடியைப் படித்துத் தமது உள்ளத்தைத் திருத்திக்கொள்ள முயற்சிப்பவர்களாகக் காணோம்.

ஆச்சாரியார் ஆட்சி செய்து கொண்டிருந்தாரே, அன்று இருந்ததைவிட இன்று காங்கிரசுக்கு, பலம் அமோகமாக வளர்ந்திருக்கிறது, என்பதை நாம் அறியாமலில்லை—

திருச்செங்கோட்டார், அன்று—இன்று, இந்தியாவின் கவர்னர்—ஜெனரல்! அறிவோம். இரண்டுக்கும் உள்ள தாரதம்மியமும் அறிவோம்.

ஆச்சாரியாரின் மருகர், பெர்லினில் விருந்துண்கிறார்—லண்டனில் பேசுகிறார்—அறிவோம் — அதனால் அவர் ஆனந்தமடைவார் — அவருடைய இனத்தவர் பூரிப்படைவர்—புல்லேந்தும் பரம்பரை என்று எண்ணாதீர்—பாரீர், பாரெங்கும் எமது ஆதிபத்யம் பரவுகிறது, என்று உளறிக் கொட்டும் அளவுக்குச் சில 'பிரகிர்திகள்' பித்தம் பிடித்து அலைகின்றன, என்பதையும் அறிவோம்.

கவர்னர்களாய் — அமைச்சர்களாய்—தூதுவர்களாய்—துரைமார்கள் காலி செய்து விட்டுப்போன வெல்வெட்டு மெத்தைகளில் கொலுவீற்றிருப்பவராய், காங்கிரஸ் தலைவர்கள், பலமும் புதிய நிலையும் பெற்றுள்ளனர் என்பதையும் அறிவோம்.

அகில உலகிலும் அவர்கள் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்—தெரியும் அதுவும்.

ஆளவந்த அவர்கள், அவர்களை ஆட்களாக்கிவிட்ட அண்ணல் காந்தியாரைப் படுகொலைக்கு ஆளாக விட்ட, அசகாயச் சூரர்கள்—இதை நாம் அறிவோம், அவர்கள் அறியார்!

அகிம்சையை, வாழ்க்கைக்கும் நாட்டு ஆட்சி முறைக்கும் ஏற்ற அசைக்க முடியாத திட்டம் என்று அல்லும் பகலும் அனவரதமும் பேசிக்கொண்டிருந்தவர்கள், அடி, உதை கொடுத்தும் — ஆள் தூக்கிச் சட்டம் போட்டும் — பத்திரிகைகளைத் தடுத்தும் — பேசுவோர்க்கு வாய்ப்பூட்டுச் சட்டமிட்டும், துப்பாக்கியைக் காட்டியும்தான், நாட்டிலே இதுபோது, ஆட்சி செய்ய முடிகிறது—இதை அவர்கள் அறியவில்லை—நாம் அறிவோம். நடைபெறுவது, அஹிம்சைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி அல்ல என்பதை நாம் நன்றாக அறிவோம். அன்று, தமிழ் மொழி, கலை, ஆகியவைகளிலே, உள்ளூரப் பற்று இருந்தாலும், வெளியே காட்டிக்கொள்ளவோ, அதற்காகப் போரிடவோ முடியாத நிலையில் ஆயிரமாயிரம் தமிழர்கள் இருந்தனர்—சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம், ஏகாதிபத்யத்துடன் எதிர்த்துப் போரிடுகிறோம்—நாட்டு விடுதலைக்குப் போரிடும் பெரும்பணியிலிருக்கும் எமக்குத், தமிழ் மொழி, கலை, என்பன போன்றவைகள் சில்லறைப் பிரச்னைகள் என்றே தோன்றுகின்றன; எனவே, நாங்கள், அவைகளில் ஈடுபடமாட்டோம்; தமிழ்மொழியை, தமிழ்க் கலையை, தமிழ் இனத்தைப் பாதுகாக்க முடியும் எங்களால், தக்க சமயத்தில், தக்கவிதமாக; இது விடுதலைப் போர்க்காலம், மொழிப் பிரச்னைக்காக மோதிக்கொள்ள இதுவல்ல நேரம்! இது அன்னிய ஆட்சியின் பிடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டிய மகத்தான போர் புரியும் காலம், மற்ற விஷயங்களைக் கவனிக்க இதுவல்ல நேரம்!—என்று கூறினர்—சிலர் சாக்குக் கூறினர்—ஆனால் பலர் உண்மையாகவே, இந்தக் கருத்துடன் இருந்தனர். எனவே அவர்கள், மொழிப்போர் நடைபெற்றபோது, ஆடவரும் பெண்டிரும், குழந்தையும் கிழவரும், சிறை சென்றபோது, தாலமுத்துவும் நடராஜனும் இறந்தபோது, கண்ணீர் பெருக்கெடுத்தது என்றாலும், துடைத்துக்கொண்டு, துரைமார்களை எதிர்க்கும் தூயபோரில் ஈடுபட்டு, தாய்மொழிப் போரில் ஈடுபடாமலிருந்துவிட்டனர். அது அன்று! இன்று? அன்று இலேசாக இருந்து இன்று கனமாகியுள்ள அவினாசியார் இதை அறிந்து கொள்ள முயற்சிக்கட்டும்—பிரமாதமான மூளை பலம் தேவையில்லை இதற்கு—சராசரி அறிவு போதும்; அவினாசியாருக்கு அந்த அளவு நிச்சயம் உண்டு; சற்றே சிந்திக்கட்டும்—அன்று இருந்த நிலைக்கும் இன்று இருப்பதற்கும் இடையே உள்ள வித்யாசம் விளங்கும்.

ஆளவந்தவருக்கு, சிந்திக்க அவகாசம் இல்லாமற் போய்விடக்கூடும். எனவே, அவருக்கு, அன்று இருந்த நிலைமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் உள்ள வித்யாசத்தை நாமே விளக்கியும் விடுகிறோம்— நமது சொந்தக் கருத்தின் துணை கொண்டல்ல—அவினாசிகள் அறிந்திருக்கும் 'தமிழ் மணி' எனும் காங்கிரஸ் ஏட்டின் கருத்தையே கல்வி மந்திரியாருக்குக் காணிக்கையாகத் தருகிறோம்;

“யாரோ சிலருடைய பூச்சாண்டி” என்று சொல்லப்படுவது ஒரு பத்தாண்டுகளுக்கு முன்னர் உண்மையாக இருக்கலாம்; ஆனால், இன்றைய நிலை அதுவல்ல. தமிழ் நாட்டிலே இன்றைய தினம் மொழிப்பற்று, இனப்பற்று வளர்ந்து விட்டது. இதில் கட்சி வேறுபாடுகள்கூடக் கவனிக்கப்படு

நாடு அறப்போரில் ஈடுபடத் துடிக்கிறது

வதில்லை. அவ்வளவு தூரம் நிலைமையிலே மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இதனை நாம் கண்ணியமாக ஒப்புக்கொண்டே தீரவேண்டும். நடுநிலை நின்று நாட்டைக் கவனிப்போருக்கு இது விளங்காமற் போகாது. நாமும் ஒரு காலத்தில் கட்டாய இந்திக்கு ஆதரவு கொடுத்து வந்தோம் இந்திக்கு எதிர்ப்புக் காட்டியோருக்கு நாம் எதிர்ப்புக்காட்டி, அதனால்கல்லடியும், சொல்லடியும் பட்ட காலம் ஒன்றுண்டு. இவ்வளவும் எதற்கு? நாடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் அந்தப் போராட்டத்துக்கு இந்த எதிர்ப்புகள் இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்காக எதிர்ப்புகளையெல்லாம் எதிர்த்துப் போராடினோம். ஆனால், இன்றைய நிலை அதுவல்ல. கிடைத்த சுதந்திரத்தைக் கொண்டு நாட்டிலே அமைதியை நிலவச் செய்து, உற்பத்தியைப் பெருக்கி, முதலாளித்வத்தை முறியடித்து, தொழிலாளரை வாழ வழி செய்யவேண்டும் என்பது நமது குறிக்கோளாகிவிட்டது. எனவேதான், இப்படிப்பட்ட வேளையில் வீண் வம்பு எதற்கு என்கிறோம். இந்தி கட்டாய பாடமாக இருப்பதைவிட, இஷ்ட பாடமாக இருப்பதே உண்மையில் பலன் தரக்கூடிய முறை. சர்க்கார் தமிழரின் வெறுப்புக்கு ஆளாகாதிருக்க வேண்டுமானால் இம்முறையைக் கடைப்பிடிப்பதே சாலச் சிறந்தது. இதனால் நாம் இந்தியை வேண்டாமென்று சொல்லுவதாக யாரும் கருதிவிடக்கூடாது. இந்தி மட்டுமல்ல வேறு எத்தனை பாஷைகளை வேண்டுமானாலும்மக்கள்தெரிந்து கொள்ளுவது நல்லது என்பதே நமது அபிப்பிராயம். தமிழ் நாட்டின் தற்போதைய நிலையில் கட்டாய ஹிந்தி கூடாது என்பதை கருத்துடையோர் யாரும் மறுத்துக் கூறமாட்டார்கள்.

"எனவே, எல்லாவற்றையும் உணர்ந்த நாம், நாட்டின் நிலையறிந்து, நடுநிலை நின்று நல்லதைச் சொல்லுகிறோம். சர்க்காரும், தலைவர்களும் கேட்டால் கேட்கட்டும், கேட்காவிட்டால் போகட்டும்."

அன்று இருந்ததைவிட இன்று காங்கிரசின் பலம் வளர்ந்திருக்கிறது, என்பதற்கான எடுத்துக் காட்டுகளைக் கூறினோம்; ஆனால், அந்தப் 'பலம்' – ஒரு மாயமான்– பொன்மான் – பதவி, பளபளப்பு; இவை; ஆனால் உண்மையான பலம்– மக்களின் ஆதரவு அன்று, நமக்கு இருந்ததைவிட இன்று அமோகம்; 'தமிழ் மணி' கணகணவென ஒலிக்கும் வேளை; அந்த எழுச்சிக் குரலை அடக்க, வெள்ளிமணிகளும் வேதிய மணிகளும் வீறிட்டழுது பார்க்கும் காலம்! அன்று சாமான்யர்களாக இருந்தோம் – வெள்ளையரின் மேற்பார்வையின்கீழ் ஆட்சி செய்யும் அளவுக்கு மட்டுமே அந்தஸ்துப் பெற்றிருந்தோம்—இன்றோ வெள்ளையர் வீற்றிருந்த வெல்வெட்டு மெத்தைகளிலே கொலுவீற்றிருக்கிறோம், என்று இந்த மாறுதலை, மமதையை மட்டுமே தரக்கூடிய இந்த உயர்நிலையை எண்ணி, ஏமாற வேண்டாம், என்று எச்சரிக்கிறோம் நாடாள வந்தோரை. அன்று, மொழிப் போரில் கலந்துகொள்ளாதிருந்த ஆயிரமாயிரம் தமிழர்கள், இன்று, ஆதரவுதர முன்வந்துள்ளனர். நமது பலத்திலாவது, அவிஞசிகளுக்குச் சந்தேகம் பிறக்கக்கூடும் —அந்த ஆயிரமாயிரம் தமிழர்களின் பலத்திலே, சந்தேகம் பிறக்காது என்று நம்புகிறோம் – ஏனெனில் அவர்களின் பலம்தான், அவிஞசிகளை ஆளவந்தார்களாக்கிற்று—ஆங்கிலரை ஓட்டிற்று — ஏகாதிபத்யம் அமைத்திருந்த எண்ணற்ற இடையூறுகளைப் பொடிப்பொடியாக்கிற்று. அவர்கள், காங்கிரசின் மூலபலம்! அந்த 'மூலபலம்' இன்று, ஆளவந்தார்களின் அட்டகாசத்துக்குப் பராக்குக் கூறிக் கொண்டிருக்க மறுக்கிறது; ஆண்மையை இழக்க மறுக்கிறது, அறப்போரில் ஈடுபடத் துடிக்கிறது; அவிஞசியாருக்கு, இந்தச் செய்தியை அர்ப்பணிக்கிறோம்.

மகாமேதை—காந்தீய ஸ்லோகங்களுக்கு விதவிதமான பாஷ்யம் கூறும் பண்டிதசிரோமணி, குல்லூக பட்டர் என்றெல்லாம், புகழ் பெற்ற ஆச்சாரியார், இந்த கட்டாய இந்தியைத் திணித்து, தமிழரின் உள்ளத்தை மிதித்ததால், ஏற்பட்ட எதிர்ப்பு, அப்படிப்பட்ட அசகாய சூரரையே, என்னென்ன சொல்லச் செய்தது என்பதை, அவிஞசியார் அறியார்.

"புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போலிருக்கிறதே! எங்கிருந்து வருகிறார்கள், இந்தத் தொண்டர்கள்" என்று பேச நேரிட்டது, அந்தப் பேரறிவாளர் பேசினார்–பேசினாரா! —பிரலாபித்தார்.

"இந்தச் சனியனுக்கு இவ்வளவு எதிர்ப்புக் கிளம்பும் என்று தெரிந்தால், இதைத் துவக்கியே இருக்க மாட்டேனே!" என்று அழுதார்.

கையில் கிடைத்ததைக் கொண்டு அடிப்பேன் என்று கர்ஜனை செய்து பார்த்துவிட்டு, இவ்வண்ணம் கதறினார்.

கிரிமினல் சீர்திருத்தச் சட்டத்தைப் பிரயோகப்படுத்திப் பார்த்து விட்டு, இப்படிப் பேசினார்.

'விடுதலை—குடி அரசு' சண்டே அப்சர்வர், ஆகிய இதழ்களுக்கு 'ஜாமீன்' கட்டச்சொல்லி, உத்தரவிட்டுப் பார்த்துவிட்டு, இதுபோலக் கையிசைந்துகொண்டு கதறினார்.

விடுதலைஆபீசைச்சோதனையிட்டுப் பார்த்துவிட்டு, இந்தி எதிர்ப்பு நிலையத்தைப் பிரித்துப் போட்டுப் பார்த்துவிட்டு, இந்தி எதிர்ப்பு முகாமிலேயே பேதமூட்டிப் பார்த்துவிட்டு, கடைசியில் ஆச்சாரியார், அழுகுரலில்தான் பேச நேரிட்டது. ஆச்சாரியார் அந்நிலை அடைந்தார் என்றால், அவிஞசியார், தனக்கு எந்நிலை ஏற்படும் என்பதைச் சற்று, சிந்திக்க வேண்டும்.

அன்று, நாம், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்தியபோது, ஏதோ அரசியல் சூட்சி என்று கூறினோர் உண்டு; கூறிடக் கொஞ்சம் ஆதாரமும் கிடைத்தது; ஏனெனில், அப்போது நமக்கு இந்த அரண்மனை வாசிகளின் — ஆகா வழிகளின் தொடர்பு இருந்தது — தொடர்புதான்—தோழமை அல்ல! அரண்மனை வாசிகளின் தொடர்பு இருந்ததற்குக் காரணம்—அப்போது, நாம் தனியாக, திராவிடர் கழகமாக, விளங்கவில்லை. நமது தலைவரின்

அவினாசியார் அறைகூவி அழைக்கிறார்

தளராத உழைப்பைத் தர்பார் சுந்தரர்கள் தங்கள் தன்னலத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ள, தந்திரமிட்டு வந்த காலம். ஜஸ்டிஸ் கட்சியிலே, சீமான்களும், துரைமார்களின் செல்லப் பிள்ளைகளும், இருந்துகொண்டு, தியாகரும் நாயரும் அமைத்த கொள்கையை வெறும் கேலிக்கூத்தாக்கி, கட்சியை, அரசியல் கழைக் கூத்தாடிகளின் கொட்டகை ஆக்கி வைத்திருந்த காலம்; நமது தலைவருக்கும், இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கூட்டத்திலே, இடம் அளிப்பதையே ஏதோ, பெரிய மனது வைத்துச் செய்கிற பெரிய உபகாரம் என்று எண்ணி இறுமாந்திருந்த காலம்.

அந்தத் தொடர்பு, நம்மை, வேறு கட்சியினர் அலட்சியமாகக் கருத வைக்கவே உதவிற்று. சீமான்களின் மோகனப் புன்னகையை நம் பக்கம் சில சமயம் வீசுவர்-கொள்கையைப் பற்றிய திட்டம் என்றாலோ, எள்ளும் கொள்ளும் அவர்கள் முகத்தில் வெடிக்கும். காங்கிரசை எதிர்க்க ஓர் படை திரட்டித் தயாராக வைத்திருப்பதாக, துரைமார்களிடம் கூறி, சுய இலாபம் தேடிக்கொள்வதொன்றே அரண்மனையில் அரசியல் நடத்திய அந்த அபூர்வ மனிதர்களின் அந்தரங்க நோக்கம். அப்படிப்பட்டவர்களிடம் 'தொடர்பு' என்றால், இலட்சியவாதிகள் நம்மைப் பற்றி ஏளனமாகத்தானே கருதியிருப்பர். ஆனால் நம்மை ஏளனம் செய்தவர்கள், அறியார்கள், நாம் ஏற்படுத்திக் கொண்டிருந்த அந்தத் 'தொடர்பு', அரண்மனைக்கும், பார்ப்பனரல்லாதாரின் பெயரால் நிறுவப்பட்ட கட்சிக்கும் உள்ள 'தொடர்பை' சேலம் செய்ய, என்ற சூட்சமத்தை. அந்தத் தொடர்பு இருந்தகாலத்திலே நாம் நடத்திய அறப்போர் கண்டே தமிழகம் ஆச்சரியமுற்றது; இன்று! அந்தத் 'தொடர்பு' இல்லை! அன்று நம்மிடமில்லாத, அரிய திட்டங்கள் இன்று உள்ளன. அன்று அந்தத் தொடர்பைக் கண்டதால் நம்மிடம் சேரமறுத்த இளைஞர்கள் இன்று பலப்பல ஆயிரவர் பரணி பாடுகின்றனர், படைவரிசையில் கூடுகின்றனர். அரண்மனைக்காரருக்கு ஒரு தீவிரத்திட்டம் தீட்டுவதென்றால் திகில்! கிளர்ச்சி என்றால் கிலி! போராட்டமென்றால்பீதி! காருண்ய மிகுந்த சர்க்காருக்கு வினயமாக விஷயத்தைக் கூறிவந்தகாலம்-அது மலை ஏறிப்போய்விட்டது—அந்தக் கறையை, தாலமுத்து நடராஜனின் இரத்தத்தைக் கொண்டு கழுவிச் சுத்தப்படுத்தியாகிவிட்டது; இப்போது நாம் மக்கள் மன்றம் அமைத்திருக்கிறோம். — மகத்தான போராட்டங்களை நடத்தும் மனப்பண்பும் தியாக உணர்ச்சியும் கொண்டோர் அணிவகுப்பைத் தயாரித்திருக்கிறோம். எனவே, திருச்செங்கோட்டார், டில்லி உயர் தேவதையாகிவிட்ட அளவு, காங்கிரசின் பலம்வளர்ந்துவிட்டது, என்று, வெளிக்குத் தெரியும்; அதேபோது, கூர்ந்து நோக்கினால், ஆர அமர யோசித்தால், நமதுபலம், வளர்ந்திருக்கும் அளவும் வகையும், ஜொலிப்பிலே, காங்கிரசைவிடக் குறைவு என்ற போதிலும், தாங்கும் சக்தியிலே, காங்கிரசைவிட அதிகம் என்பது நன்கு விளங்கும்.

ஒரு இலட்சியத்தைப் பெறுவதும், அதனை ஈடேற்ற, எத்தகைய தியாகம் செய்யத் தயாராகிவிடுவது என்ற உள்ளம் உரம் பெறுவதென்பதும், சாமான்யமான காரியமல்ல; அந்தச் சாதனையில் நாம் வெற்றிபெற்றிருக்கிறோம்.

நாம் ஓர் தனிஇனம்—தன்னலக்காரரின் சூழ்ச்சியினால் தாழ்ந்து போனோம்; நாடாண்ட இனம், எனினும் நயவஞ்சகர்களிடம் சிக்கி நசித்துப்போனோம், என்பதை அறிந்துகொண்டோம்.

நாம் கூறுவதுபோல, திராவிட இனம் என்றுகூறிக்கொள்ள, மனம் இல்லாத சிலபலரும்கூட, தென்னாட்டவர்-தென்னிந்தியர் - தமிழர் - என்று, பலப்பல பதங்களைக் கூறிடுவர்-ஆனால் பார்வையோ, ஒன்றுதான். திராவிட இனத்தின் மார்க்கத்துறை ஆரியரிடமும், அரசியல் டில்லியிலும், பொருளாதாரம் பம்பாயிலும் பிணைக்கப்பட்டிருப்பதை, நாம்கூறி, தனி அரசு கோருகிறோம்-திராவிட நாடு திராவிடருக்கு என்று பேசுகிறோம். அந்த அளவுக்கும் முன்றைக்கும் வரமறுக்கும் பலர், வடநாட்டவருக்கு இங்கு வாணிபத் துறையிலே ஆதிக்கம் வளர்ந்துவருவதைக் கண்டு வருந்தி, இது ஆகாது என்று தான் பேசுகின்றனர் - தனிநாடு கோரவில்லை என்ற போதிலும், வடநாட்டாரின் இந்தப் பொருளாதார ஆதிக்கம் கூடாது என்று கூறாமலில்லை.

வடநாட்டின் நோக்கமெல்லாம், இந்தியா-இந்திய தேசியம்-இந்திய கலாச்சாரம் என்ற வாய்வேதாந்தம் பேசிக்கொண்டே, திராவிடத்தை-தென்னாட்டை, வெறும் விவசாய நாடாகவும், மூலப்பொருள்களை உற்பத்திசெய்து வெளியே அனுப்பி விட்டு, வெளியார் தயாரித்து அனுப்பிவைக்கும் 'பொருள்களை' வாங்கி உபயோகிக்கும் மார்க்கட்டாகவும் செய்வதுதான், என்பதை இப்போது, நமதுகழகத்திலே மட்டுமல்ல, வேறுபல இடங்களிலே, வட்டாரங்களிலேயும் உணருகிறார்கள்-விசாரப்படுகிறார்கள் - ஒரு! சிலர் வெளியே எடுத்துக்கூற வெட்கப் பட்டுக்கொண்டும் உள்ளனர்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் காலமுதற்கொண்டு நேற்றுவரை, சீமைத் துரைமார்கள் எப்படி இந்திய பூபாகத்தைப் பட்டிக்காடாகவும், பருத்தியை ஏற்றுமதி செய்துவிட்டு ஆலை ஆடைகளை இறக்குமதி செய்யும் இளித்தவாயர் வாழும் இடமாகவும், புண்ணாக்கை அனுப்பி விட்டு, சாக்லெட்டாக இறக்குமதி செய்து, ஆஹா! என்ன இனிமை! எவ்வளவு மணம்! என்று கூறிடும் கருத்தற்றோர் நிரம்பிய இடமாகவும் அந்தப் பூபாகத்தை ஆக்கிவைத்தார்களோ, அதேபோல இப்போது வடநாட்டார், திராவிடத்தை நடத்தி வருகிறார்கள். இந்த உண்மை, மறைக்க முடியாத அளவுக்கு இன்று வெளிச்சமாக்கப்பட்டுவிட்டது.

பெரியசாமிதூரன் —மிகவும் அமைதியான உள்ளம் படைத்த காந்தியவாதி-'ஈரோட்டு வாடைபட்டுக் கெட்டுப்போனவரல்ல'-அவினாசியாரின் ஆத்மார்த்த நண்பர்களிலே ஒருவராம்-அவர் நடத்தும் 'காலச் சக்கரம்' எனும் இதழில், வடநாட்டவரின் பொருளாதார ஏகாதிபத்யத்தைப்பற்றிக் கட்டுரை வெளிவருகிறது என்றால், இந்த உண்மை, மறைக்க முடியாத அளவு வளர்ந்துவிட்டது, என்றுதானே பொருள்.

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 4—7—48 [ஞாயிறு

இருதய கீதம்

✲

திராவிடர்கள், தங்கள் இலட்சியத்தை மீண்டும், தெளிவுபடுத்தி விட்டனர், இந்தத் திங்கள் முதல் நாளன்று, தமிழகமெங்கும்; திராவிடநாடு தனி நாடு ஆகவேண்டும், அதற்கான கிளர்ச்சியைத் தளராது, இறுதிவரை செய்து வருவோம் என்று தெரிவித்துவிட்டனர்.

திராவிடர்கழகம், கேவலம் பார்ப்பனத் துவேஷத்தைப் பரப்பும் காரியம் செய்யும் கருத்தற்றோரின் கூடமல்ல—பதவி பிடிக்கும் நோக்கம் கொண்டோரின் பாசறையுமல்ல, காங்கிரசுக்கு எதிர்ப்புக் கிளப்பி, அரசாட்சியைக் கவிழ்த்து, காட்டாட்சியைக் காண விரும்பும் கபோதிகளின் கூடாரமல்ல—இருந்ததும், நாம் இழந்ததுமான ஓர் இலட்சியத்தை மீண்டும் நிலை நிறுத்த, மாநிலத்திலே எங்கும் எவரும் மறுக்கொணாததுமான, பிறப்புரிமையுமான, சொந்த நாட்டு விடுதலையைப் பெறுவது என்ற இலட்சியத்தை மீண்டும் அரியாசனமேற்றுவது எனும் அரும் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துள்ளவர்களின் அணிவகுப்பாகும்.

ஏளனத்துக்கும் கண்டனத்துக்கும் இடையே தள்ளப்படுவோம் என்பது தெரிந்தும், இந்த இலட்சியத்தை இழக்க மறுக்கும் இயல்பினர் கொண்டது இக்கழகம்—காரணம்—இக்கழகத்தினர், உலகிலே, சிறந்த இலட்சியங்களைக் கொண்டிருந்தவர்கள், எரிகிற எண்ணெய்க் கொப்பரையிலும், பெரு நெருப்பிலும் தள்ளப்படும் அளவுக்குச் சித்திரவதைக்காளாக்கப்பட்டனர்; ஆனால் சித்தம் சிதையாது நின்றனர், எனவேதான் அவர்களின் தத்துவம், தணலிலிட்ட தங்கமாகத் திகழ்ந்தது என்ற வரலாற்றினை அறிவர்—அந்த அறிவாயுதமே, திராவிடர் கழகத்திற்குப் பெருந் துணையாக நிற்கிறது. சில்லறை இலாபங்களைப் பெறும் நோக்கம் கொண்டதாக இருப்பின், திராவிடர் கழகம், துவண்டு போயிருக்கும்—இன்று ஆளவந்தார்களின் எதிர்ப்புக்கு அஞ்சாது ஓங்கி வளரும் நிலை கழகத்துக்கு இருப்பதற்குக் காரணம், உடனடியாகப் பெற்று உள்ளம் குளிரலாம் என்று, எந்தச் சில்லறையின் மீதும் சித்தத்தைச் செல்லவிடாமல், கழகம், தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டது தான்.

திராவிடர்கழகம், இந்தத் தலைமுறை மக்களின் நிலையை நிர்ணயிக்கும் பெரும் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறது—மிக மிகப் பெரிய பொறுப்பு.

முடியுடை வேந்தர்கள் காலத்தில் ஜடையுடை வேற்றூரிடம் இழந்துவிட்ட சுதந்திரத்தை, மீட்டுத்தரும் மகத்தான நோக்கம் கொண்டிருக்கிறது.

இலக்கியத்திலும் கல்வெட்டு மூலமும் அறியக்கிடக்கும் உண்மையினால், உள்ளத்தில் ஓர் எழுச்சி ஏற்பட்ட காரணத்தால், எப்பாடுபட்டேனும், என்ன விலை கொடுத்தேனும், இன்பத் திராவிடத்தைப் பெற்றாகவேண்டும், என்று சூள் உரைத்துப் பணி புரிகிறது.

திராவிடத்தில் தனி அரசு என்றால், பாலைவனத்தில் பாற்சோணி என்று பொருள், என ஏளனம் செய்தோரின் தொகை குறைகிறது—எனவே கழகத்தின் ஆர்வம் வளருகிறது.

திராவிடராவது ஆரியராவது என்று கேலிசெய்தோரின் காதுகளிலேயும் படும்படி, ஆரியமொழியாம் சமஸ்கிருதம் அரியாசனம் ஏற வேண்டுமென்று ஒருவரும்—அகிலமெலாம் ஆரியநாகரிகம்பரவவேண்டுமென்று வேறொருவரும் பேசினர்—கேலி பேசினோரே தலையைக் கவிழ்த்துக்கொண்டனர் வெட்கத்தால்—இது கண்டு கழகம், உண்மை ஒருநாளும் சாகாது—திண்மை தான் வேண்டும் நமது திட்டம் ஈடேற, என்று எண்ணவும், புதிய எழுச்சி பெறவும் முடிந்தது.

பக்கத்திலே உள்ளபர்மாவும், படுகளமாகிக் கிடக்கும் இந்தோனிசியாவும், தனிஅரசு செலுத்த முடியுமென்பதைத் தரணிக்கு அறிவிக்கும் போது, ஏன் திராவிடம், தனிஅரசு ஆளக் கூடாது, என்று கழகம் கேட்கிறது—கருத்தில் கபடமற்றவர்கள் அனைவரையும் நோக்கி.

தனி அரசு என்றால் என்ன பொருள் என்பதையும் கழகம்தெளிவாக்கி இருக்கிறது. வெளிநாட்டாரின் படை எடுப்பு, ஆபத்து, ஏற்படின், இந்தியபூபாகத்து அரசுகள், ஒன்றுக்கொன்று துணை நின்று மாற்றானை ஓட்டிடலாம்—அதற்கான ஒப்பந்தம் செய்துகொள்வோம், என்று தெரிவிக்கிறது.

திராவிடத்தின் அரசு முறை, சமுதாய அமைப்புமுறை, பொருளாதார முறை, இவைகளிலே யாருடைய அதிகாரமும் இருத்தல் ஆகாது என்று கழகம் கூறுகிறது.

இன்றோ, எடுத்ததற்கெல்லாம், டில்லி நோக்கித் தவம் கிடக்கிறோம், ஏற்பட இருக்கும் அரசியல் திட்டமோ எல்லா அதிகாரங்களையும், மத்யசர்க்காரிடம் கொடுத்துவிட்டு, மாகாணங்களை, பெரிய ஜில்லா போர்டுகளின் நிலைமைக்குக்கொண்டு வருகிறது. இந்த நிலையைத்தன்மானமுள்ள யாரும், ஏற்றுக்கொள்ள முடியாது.

திராவிடநாடு திராவிடருக்கு என்றால், வடவருடன் வம்புக்குப் போவது என்றோ, இங்கு, இனவெறிக்கு இடம் அளிப்பது என்றோ பொருள் இல்லை. வடநாட்டுக்கு, இன்று வட்டி செலுத்தும் கடன்காரன்போல உள்ள கேவலநிலைமையைப்போக்கிக்கொண்டு, இங்குள்ள இயற்கைச் செல்வத்தை, இங்குள்ள மக்களின் துணையும் உழைப்பும் கொண்டு விஞ்ஞான ரீதியிலும் சமதர்ம அடிப்படையிலும் பெருக்கி எல்லோரும் இன்புற்று இருப்பது என்றே பொருள். தோழராக—நண்பராக—கூட்டுவேலை புரிவோராக—குவலயத்தின் மதிப்பைப் பெறும் ஓர் அங்கமாகத், திராவிடம் வாழட்டும், வடநாடு, திபேத்நாடு, ஆப்கன் நாடு, அமீர்நாடு, அசாம்நாடு, பர்மா நாடு என்பனபோன்ற நாடுகளுடன் எல்லாம். பகை கிளப்ப அல்ல, இத்திட்டம்—போலி நேசமும் வற்புறுத்தி இணைக்கப்படுவதும் எதிர்கால ஆபத்து என்பதை உணர்ந்து, தனியாவோம், பிறகு, தோழராவோம் என்று தரணிக்குத் தெரிவிக்கும் திட்டமாகும்.

ஒரு தனிநாடாகவே இருந்தோம் மூதாதையர் காலத்தில்-வெள்ளையர் மூட்டிவிட்ட தீ, இங்கு பரவுமுன்பு வரையில், வடநாட்டு ஏகாதிபத்திய அரசு எதுவும் நம்மை ஆட்படுத்திய தில்லை-குப்த, மௌரிய, மொகலாய, அரசுகள் எவையும், திராவிடத் தரணியின் தன்னாட்சியைத் தகர்த்த தில்லை. இலக்கியம் நாம் இறும்பூ தெய்தும்படி கூறுகிறது, "சேரன் செங்குட்டுவன், இமயத்தில் வெற்றி கண்டான்-சோழன் ராஜேந்திரன் பர்மாவில் பவனி வந்தான்-கரிகாலனின் கப்பற்படை வங்கக் கடலைக் கலக்கிற்று-தொண்டைமானின் தீரப் படை சாளுக்கியரைச் சின்னபின்ன மாக்கிற்று-என்றெல்லாம்.

அத்தகைய வீரதீரர் வாழ்ந்த நாடு, ஏன் வேற்று அரசிடம் அடி பணிந்திருக்க வேண்டும்? இங்கு, தனிஅரசு நிறுவி, காத்துக்கொள்வதற்கேற்ற, அறிவும் ஆற்றலும் ஆட் பலமும் இயற்கைச் செல்வமும் இல்லையா! முத்தமிழ்பெற்ற நாடு, அறிவுபெறாத நாடா! கனகவிசயர் தலையில் கல்லேற்றிக் கொணர்ந்த நாட்டவர், ஆற்றலற்று போயினர்! காவிரி, தென்பெண்ணை வைகை முதலிய நதிகள், இயற்கை அன்னை தரும்தங்கஊற்றுகளல்லவா? என்ன இல்லை என்று நாம், எவருக்கோ ஏவலாகி நிற்பது? எதில் குறைந்தவர் நாம்! நாமென்ன வரிசைவரிசையாக வேற்றூர்களை உள்ளேநுழைய விட்டு விட்டு வகையற்றுக் கிடந்தோமோ, கைபர் கணவாய் அருகே, வீரத்தோடு வாழ்ந்து வந்தோம்-வஞ்சகத்தை அறியாமல் வீழ்ந்தோம். வாள் ஏந்தி எவரும் நம்மை அவர் தாள்பணியச் செய்த தில்லை-புல்லேந்திகளிடம் புத்தியைப் பறிகொடுத்த சிலரால், சீரழிவு கண்டோம்-இன்று விழித்துக் கொண்டோம்-வீறு கொண்டோம்-எங்கள்நாடுதிராவிடம்; இதில் ஆதிக்கம் வேறுயாருக்கும் இருக்க விடோம், என்று கூறுகிறோம்-இதில் என்ன தவறு காண்கிறீர்கள்-என்று கழகம் கேட்கிறது.

ஐரோப்பா கண்டத்தைப் பார்—தனி அரசுகள் பலப் பல!

ஸ்பெயினைப் பார்—அதிலே ஒரு பகுதி, போர்ச்சுகல், தெரிந்து கொள்.

அயர்லாந்தைப் பார்-அதிலே ஒரு பகுதி தனி அரசு, அறிந்துகொள்.

ஸ்வீடனையும் நார்வேயையும் பார்—அவை இரண்டும் முத்தமிட்டுக் கொண்டுள்ளது போல இயற்கை அமைத்திருந்தும், அவை, தனித் தனி அரசு, என்பதைத் தெரிந்து கொள்.

துருக்கியைப் பார்--அது பழைய உதுமானிய சாம்ராஜ்யத்தின், ஒரு துண்டு-இன்று தனி அரசு பெற்றுத் திகழ்கிறது, தாழ்வென்ன கண்டது அதனால், என்று, உலகப் படத்தையும் அவை உரைக்கும் பாடத்தையும் காட்டிக் கேட்கிறது கழகம்.

எம்மைப் பார்! நாங்கள் இலேசல்ல, 'கனம்' என்பதைத் தெரிந்து கொள். எம்மிடம் "இந்துவும் மித்ரனும் இருப்பதைப் பார் - போலீசும் பட்டாளமும் உண்டு தெரிந்து கொள்," என்று காங்கிரஸ் தலைவர்கள் - ஆளவந்தார்கள், நமக்குக் கூறுகின்றனர்.

"உள்ள உயிர் ஒன்றுதான் - அது பிரிவதும் ஒருமுறைதான் - பிரியப் போவதும் உறுதிதான் - வறுமைத் தேள் கொட்டியோ, வர்ணாஸ்ரமப் பாம்பு தீண்டியோ, பிளேக் கிருமியாலோ, காலரா பூச்சியாலோ, காலத்தின் தாக்குதலாலோ, எதனாலோ போகப் போகும் இந்த உயிர், எங்கள் நாட்டை மீட்கப் போர் தொடுத்து, உரிமைப் போரில் போகட்டும் - அது மேல் - சிலாக்கியம்-" என்று உறுதியுடன் உரைத்துவிட்டனர், ஆயிரமாயிரம் இளைஞர்கள், திராவிடத் தனிஅரசு கோரும் திருநாள் நடாத்தி.

நாட்டுக்கோர் நல்லபடை திரண்டு விட்டது — நாடாள வந்துள்ளோர் அறியட்டும். கூட்டுக் கிளிகளல்ல இப்படை, பதவிக் கொவ்வைகண்டு இளித்திட. பவனிவரும் இந்த விடுதலைப்படையின் வளர்ச்சியைஒழிக்க, படைத் தலைவர் பெரியாரை, பாதுகாப்புக் கைதியாக்கும் நோக்கம் கொண்டுள்ளனராம் ஆட்சியாளர். ஆட்சியாளர்களால், பெரியாரைக் கைதுசெய்ய முடியும்—சிறையும் அவருக்குப் பழக்கமான இடந்தான் -ஆனால், பெரியார் சிறைப்படுத்தப் பட்டால், படைகுலையுமென்றோ, பணி குறையுமென்றோ, எண்ணுவது பெரும்பேதமை. பெரியாரின் பெரும்படை, மும்மடங்கு பெருகும் — பணி மும்முடங்கு அதிகமாகும். புலியை அடக்கிவிட்டோம், அவரைச் சிறையிலிட்டதால் என்று எண்ணினால் ஆட்சியாளர் பெருத்த ஏமாற்றத்துக்கு ஆளாவர், தென்றலும் புயலாகும்.

இந்தத்திங்கள் முதல் நாளன்று, நடைபெற்ற கூட்டங்கள்,-நாடாள்வோருக்கு இந்தத் தெளிவுரையைத் தான் தந்திருக்கவேண்டும். திராவிட நாடு திராவிடருக்கே என்பது திராவிடரின் முழக்கம்-ஒரு இனத்தின் இருதயகீதம்--அதை அழிக்கும் ஆற்றல் எந்தச் சக்திக்கும் கிடையாது.

*

வெளிநாடுகளில் கல்வி பயிலும் மாணவர்கள்

இந்திய சர்க்காரின் வெளிநாட்டு மாணவப் பதவித்திட்டத்தின்படி அயல்நாடுகளுக்கு ஏற்கெனவே அனுப்பிவைக்கப்பட்டிருந்த மொத்தம் 900 மாணவர்களில் 1948 ஏப்ரல் 30 தேதி வரையில் 72 மாணவர்கள் தங்கள் வெளிநாட்டுப் படிப்பைப் பூர்த்தி செய்துவிட்டுத்திரும்பி விட்டார்கள். அவர்களில் 46 பேருக்கு ஏற்கெனவே தகுந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டு விட்டன. மேலும் ஒன்பது பேர் அவர்களில் வேலை சம்பந்தமாக சமஷ்டி சர்க்கார் ஊழியத் தேர்ந்தெடுப்புக் குழுவைப் பேட்டி காண வருமாறு அழைக்கப்பட்டிருக்கின்றனர். பதின்மூன்று பேருடைய விஷயம் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது.

மே மாதத்தில் இன்னும் எட்டு மாணவர்கள் தங்கள் வெளிநாட்டுப் படிப்பு முடிந்து வந்திருக்கின்றனர். அவர்களுக்கு அலுவல் கொடுப்பது பற்றிய விஷயமும் ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

இந்திய சர்க்காரின் பல்வேறு மந்திரி சபைகளுக்கும் குறிப்பாய்த் தேவையாயிருக்கும் நிபுணர்களைக் கருத்தில் கொண்டுதான் தொழில் நுட்பத் துறையிலும் விவசாயத் துறையிலும் மேற்படிப்புப் படிப்பதற்காக மாணவர்கள் பிரதானமாய் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

அணைக்கமுடியாத நெருப்பை மூட்டுகிறார்

7-ம் பக்கத் தொடர்ச்சி

"யுத்த காலத்திலே வெள்ளையர் சம்பந்தப்பட்ட கம்பெனிகளை ஆரம்பித்தால் அதிக சலுகைகள் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் சர் ஆர்தேஷிர்டலால் என்பவர் ஒரு டாடா-பிர்லா திட்டத்தைத் தயாரித்தார். அதன் விளைவாகப் பெரிய ஆபத்து இந்தியாவின் பொருளாதாரத் துறையிலே ஏற்படும் நிலைமை உண்டாகியிருக்கிறது.

சில உதாரணங்களை எடுத்துக் கொள்வோம். பிரிட்டனிலிருக்கும் "மாரிஸ்" என வழங்கப்படும் கார்களை உற்பத்தி செய்யும் நப்பீல்டு பிரபுவும் இந்தியாவிலிருக்கும் பிர்லா என்னும் பிரபல முதலாளியும் சேர்ந்து ஆரம்பித்திருக்கும் ஒருஸ்தாபனம் இந்துஸ்தான் மோட்டார் கம்பெனி என வழங்கப்படுகிறது. இதில் சுமார் 100-க்கு 25 சதவிகிதம் நப்பீல்டு பிரவுக்குப் பங்கு இருப்பதாகப் பம்பாயில் வெளியாகும் ப்ரீ பிரஸ் ஜர்னல் என்னும் பத்திரிகையின் வாயிலாகத் தெரிய வருகிறது. இந்தக்கம்பெனி 'இந்துஸ்தான் டென்' என்னும் கார்களை உற்பத்தி செய்வதாகும். இந்தியாவிலே செய்யப்படும் முதல் கார் இதுதான் என்று பல பத்திரிகைகளிலே நாம் பார்த்தோம். ஆனால் "காமர்ஸ்" என்னும் பத்திரிகையிலிருந்து இந்தக்காரின் முக்கியமான உறுப்புக்களெல்லாம் இங்கிலாந்திலிருந்து நமது தேசத்துக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதும், அவைகளை ஒன்று சேர்த்துக் காரை ஓடும் நிலைமைக்குக்கொண்டு வருவதுதான் இந்தியாவில் நடக்கும் மோட்டார்த் தொழில் என்பதும் தெளிவாகிறது. ஆகையால் 'இந்துஸ்தான்' என்னும் பெயரைத் தவிர இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டது மேற்படி காரில் ஒன்றும் இல்லை என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாக, சாய உற்பத்தித்தொழிலை எடுத்துக் கொள்வோம். இம்பீரியல் கெமிகல்ஸ் என்னும் பெயர் எல்லோருக்கும் தெரியும். அது சமீபத்திலே டாடா கம்பெனியாருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி அந்தக் கம்பெனி உற்பத்தி செய்யும் சாயங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டதாக விற்கப்படுகின்றன.

இந்தியாவிலே பெரும் பணக்கார முதலாளிகளில் ஒருவரான டால்மியாவை எடுத்துக்கொள்வோம். 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்னும் பத்திரிகையையும் அதை உற்பத்தி செய்யும் சாதனங்களையும் அவர் சுமார் 2½ கோடி ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார். எனினும் வெள்ளையர்களுடைய ஆதிக்கத்தில் எவ்விதமிருந்ததோ அப்படியேதான் இன்னும் அது இருக்கிறது.

யுத்த காலத்திலே 1942-ம் வருஷம் அமெரிக்க டெக்னிகல் தூதுகோஷ்டி கிராடியின் தலைமையில் இந்தியாவிற்கு வந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அது இந்தியத் தொழில் வளர்வதம் காக்கக்கூறிய யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாகவே தெரியவில்லை. ஆனால் 1940-ம் வருஷத்திலே கிழக்கத்திய நாடுகளின் பொருள் பலத்தை அதிகரிப்பதற்காகக் கூடிய "ஈஸ்டர்ன் குரூப்" என்னும் மகாநாட்டில், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் ஓரே தொழிலைப் பல நாடுகளில் ஏற்படுத்தித் தொழிலபிவிருத்திப் பலத்தை வீணாக்கலாகாது என்பதைக்காரணமாகக் காட்டி, ஆஸ்டிரேலியா ஆகாய விமானங்களை உற்பத்தி செய்வதால் இந்தியா அவைகளை உற்பத்தி செய்யக்கூடாது என்று தீர்மானித்தார்கள். இவ்விதம் இந்தியாவின் தொழிலபிவிருத்தியை நசுக்கும் கொள்கையே இங்கிலாந்தின் உயிர் நாடி என்று எண்ணும் பிரிட்டிஷ் வியாபாரக் கூட்டத்தோடு உறவாடி நம் வியாபாரத்தில் பங்கு கொடுத்து, நமது வியாபாரத் திட்டத்தை அவர்கள் நிர்ணயிக்கும் அளவில் நமது இந்திய முதலாளிகள் நடந்துகொள்வது மிகவும் வருந்தத்தக்க நிலைமைதான்.

முன் கூறியபடியே, மோட்டார் ஹவுஸ் (குஜராத்) லிமிடெட் என்னும் ஸ்தாபனமும், நேஷனல் ரேயான் கார்ப்பரேஷன் என்னும் கம்பெனியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் இந்தியாவின் புதுத் தொழில்களைக்கட்டுப்படுத்தி அந்நியர் ஆதிக்கத்தில் வைப்பதற்கும், இந்தியாவைப் பிறநாட்டுப் பொருள்களுக்கு ஒரு மார்க்கெட் ஆக்குவதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள்போன்றே வேலை செய்ய முடியும்.

இப்புது ஏகாதிபத்தியத்தை ஒழிக்கவேண்டும்."

இவ்விதம், காலச்சக்கரம் கட்டுரை வெளியிடுகிறது.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டிருந்த காரணத்தால், நாங்கள் தமிழகம், தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழ் நாகரீகம், என்பவைகளைப் பற்றிக் கவனியாமலிருந்துவந்தோம்—அக்கரை இல்லாததால் அல்ல; அவகாசம் கிடைக்காததால்—என்பதை இன்று எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

பிரசண்டவிகடன் ஆசிரியர் போலச்சிலர், கட்டாய இந்தி கூடாது, அதை ஒழிக்கக் கிளர்ச்சி நடத்துவோம் என்று கூறுகிறார்கள். தமிழ்மணி ஆசிரியர்போல், பலர், தமிழகத்தின் தன்மானம் காப்பாற்றப் படவேண்டும், தன்னலக்காரரின் கொட்டம் அடக்கப்படவேண்டும், வகுப்புவாதம் பேசுவது மட்டுமல்ல, செயலில் மும்முரமாகச் செய்துவரும் பார்ப்பனருக்கு ஆதிக்கம் இருக்கக்கூடாது, பதவியில் அமர்ந்ததும், காங்கிரசின் கோட்பாடுகளையே காற்றிலே பறக்கவிட்டுவிட்டு, அதன் தூய்மையைக் கெடுத்த கயவர்களிடமிருந்து தமிழகம், மீட்கப்படவேண்டும் என்று பேசுகின்றனர்.

தேசியப் போராட்டம் என்ற போர்வைக்குள்ளே புகுந்துகொண்டு காங்கிரசைத் தமது கைப்பொம்மையாக்கிக்கொண்டு, கபட நாடகமாடும் முதலாளிமார்களின்முகாமை முறியடித்து, நாட்டிலே வளர்ந்து வரும் காங்கிரஸ் பாசீசத்தை ஒழித்து, பாமரன் வாழவும், பாட்டாளி மீளவும், சமதர்மம் தழைக்

அறப்போருக்கு ஆயத்தமாய் இருங்கள்

கவுமான திட்டம் தேவை—இத்தகைய திட்டம் தோன்றுதபடி தடுத்து, இலாபக் கோட்டைகள் கட்டவிரும்பும் வடநாட்டு முதலாளித்வமுறை ஒழிக்கப்படத்தான் வேண்டும், என்பதை, மதுரை, "தமிழ்நாடு" போன்றஇதழ்கள் அச்சம் தயை தாட்சணியமின்றிஎடுத்து எழுதிக் கொண்டுள்ளன.

இவ்வளவும் ஈடேற, தமிழரசு தேவை—எல்லைபற்றி உள்ளதொல்லையைக் கல்லிஎடுத்து வீசிவிட வேண்டும், தமிழருக்குத் தமிழரசு வேண்டும், என்று 'முரசு' கொட்டுகிறார், காங்கிரஸ் நடாத்திய சுதந்திரப் போராட்டத்தில் முன்னணி இருந்த நண்பர் ம. பொ. சி.

இங்ஙனம், பலர், பலப்பல அளவு, வருகின்றனர், நாம், தன்னந்தனியே, கேலிக்கும் கண்டனத்துக்கும், எதிர்ப்புக்கும் ஏசலுக்கும் இடையே சென்று கொண்டுள்ள பாதையில்!

கற்கள் வீழ்ந்தன—கண்டனச் சொற்கள் வீழ்ந்தன—நமது உடலிலிருந்து இரத்தம் சொட்டிற்று, கண்களிலிருந்து நீரும் சொட்டிற்று—நாம் களைத்துவிடவில்லை—பாதையினின்றும் விலகிவிடவில்லை—கற்கள் விழுவது குறையலாயிற்று—கற்களை வீசினோர், இப்போது அதோ, தமிழ்மொழி, தமிழரசு, தமிழ் சோஷலிய அரசு, வடநாட்டு வாணிப ஆதிக்க ஒழிப்புமுறை, என்ற பலப்பல பகுதிகளில்—நாம் செல்லும் பாதையிலே உள்ள பகுதிகளில்—வரக்காண்கிறோம் – வாட்ட வருத்தத்தை மறக்கிறோம்—வாழ்க நம் தோழர்கள்! வளர்க அவர்தம் ஆர்வம்! என்று கூறுகிறோம்.

அவிஞசியார், இந்தத் தோழர்களை ஒன்று சேரச்செய்கிறார்—அவரும், திராவிடர்தானே!

கட்சி வேறுபாடுகளைக்கூடக் கவனிக்கமாட்டார்கள், இந்த, மொழிப் பிரச்னை பற்றிய கிளர்ச்சியில்—என்று தமிழ்மணி எழுதுகிறது. உண்மை! ஆனால், ஊடுருவிப்பார்த்தால், தமிழருக்குள் இருப்பதாகக் கருதப்படும் கட்சி வேறுபாடுகள், மனப்பிராந்தி, அல்லது நெடுநாட் பழக்கத்தால் ஏற்பட்ட எண்ணம்—உண்மை நிலையல்ல—என்பது விளங்கும். பெரியாரின் தூத்துக்குடிப் பேருரை, இதனைத் தெளிவுபடுத்தியுமிருக்கிறது. அன்றாட அரசியல் பிரச்னையும், ஆட்சியைக் கைப்பற்றும் பிரச்னையுமல்ல, திராவிடர் கழகத்துக்கு. நாட்டுக்கு ஓர்புதிய நிலை—மக்களுக்கு ஓர் புதிய மாண்பு—அரசுக்கு ஓர் புதிய அந்தஸ்த்து—அவினுசிகளுக்கும் ஓர் அற்புதமான விடுதலை—டில்லியிலிருந்து — படேலிடமிருந்து—வடநாட்டு பாசிசத்திடமிருந்து விடுதலை — வாங்கித் தரும் எண்ணம், திராவிடர் கழகத்துக்கு; எனவே, 'வேறுவேறு கட்சிகள்' என்ற பேச்சுக்குப் பொருள் இனி இல்லை. இப்போது உள்ளது இரண்டே கட்சிகள்—ஒன்று, இந்திய அரசு என்ற சாக்குக்கூறிக் கொண்டு, இலாபவேட்டைக்காரர்களிடம் நாட்டை ஒப்படைப்போர், ஓர்கட்சி; நாட்டைமீட்டு, நற்பண்புகளுக்கு உறைவிடமாக்கி, மக்களை வாழவைக்க, அறப்போர் புரியும் மற்றோர், கட்சி; இவைகளே உள்ளன.

இந்த நிலையைத் தெளிவு படுத்துகிறார், அவிஞசியார், தமிழரை அறைகூவி அழைப்பதன் மூலம்—கட்டாய இந்தியை நுழைப்பதன் மூலம்.

கடும்போர் மூண்டுவிடும் என்பதற்கான அறிகுறிகள், தென்படுகின்றன—தெளிவிருப்பின் — மிச்சமீதியாவது இருப்பின்—நாடாளவந்தவர்கள், தெரிந்து கொள்ளலாம். காற்றடிக்குது—கடல்குமுறுது என்பார்களே, அந்தநிலை, பிறக்கிறது. இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள் எல்லோரும் வாருங்கள் தோழர்களே! என்ற புரட்சிக் கவியின் குரலொலி கேட்கிறது, "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்டநினைக்கும் சிறைச்சாலை!"—என்று, எங்கெங்கிருந்தோ, எண்ணற்ற இளைஞர்களின் இருதய கீதம், காற்றிலே மிதந்து வருகிறது. முன்பு ஆண்ட ஆச்சாரியார், 'கேளாக் காதினர்' எனவே, காற்றிலே மிதந்து வந்த கானம், தாலமுத்துவின் மனைவியின் தாலி அறுபட்டு, அந்தத்தமிழ் மாது, ஐயகோ! என் கணவனின் உயிர் குடித்தாயே, இந்திப்பேயே! என்று அலறித் துடித்து அழும் அளவுக்கு வளர்ந்த பிறகே அவர் காதில் பட்டது. அவிஞசியாருக்குக் கேளாக் காதிருப்பதாக நாம் கேள்விப்படவில்லை. எனவே, தமிழரின் படைவரிசையில் பேச்சுக்கிளம்பும்போதே, நிலைமையை அறிந்து, நடந்து கொள்வார் என்று, இன்னமும் நம்புகிறோம்.

மயிலையும் திருவல்லிக்கேணியும், மனோரம்மியமான இடங்கள்—நிமிர்ந்து நடப்போருக்கு—குனிந்து நடப்போருக்கு மிரட்டும் இடங்கள் ஆம்—ஆம்—ஆனால், மக்கள் மன்றம் அங்கு இல்லை! ஆயிரங் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்கும் அரசியல் கழைக் கூத்தாடிகளும், யார் ஆண்டாலும் நமது வாழ்வு ஆனந்தமாக இருந்தால் போதும் என்று கருதும் அரசியல் தரகர்களுமல்ல, ஒரு நாட்டின் ஜீவநாடி! அவிஞசியார், அத்தகையோரின் பேச்சைக் கேட்டு, ஏமாறுகிறார். ஆனைக்கு அஞ்சி, கிளியைக் கொல்கிறார்! வல்லூருக்குப் பயந்துகொண்டு மாடப்புறாவைக் கொல்கிறார். புலிவேட மிட்டோர்க்குப் பயந்துகொண்டு, புள்ளிமானைக் கொல்கிறார். இந்திமொழி வேண்டும் என்ற இலாப நோக்குடையார் பேச்சைக் கேட்டுக்கொண்டு, செந்தமிழைச் சீரழிக்கிறார்—தமிழர் செய்யக்கூடாததைச் செய்யத் துணிகிறார்—பத்துப் பாட்டைப் பாடிடும்நாட்டில், செத்த வடமொழிக்குச்சேடியாக இருக்கும் அளவு நிலைபெற்ற, இந்தியைக் கட்டாய பாடமாக்குகிறார்—தமிழரின் உள்ளத்தை, அதிகாரக் கோல் கொண்டு, குத்துகிறார்—அணைக்க முடியாத பெரு நெருப்பை மூட்டிவிடுகிறார்—ஆண்மைத் தமிழரை, அறப்போருக்கு அழைக்கிறார்.

ஆம்! ஆம்! அறப்போருக்கு ஆயத்தமாக இருக்கத்தான் வேண்டும், என்று திராவிடர்கழகத் தலைவர் அறிவித்துவிட்டார் — தொண்டர்களைக் கண்டு பேச, வருகிறார்.

ஒதுங்கி நிற்பவர்கள்—அது இல்லை இது இல்லை என்று பேசுபவர்கள், ஆகியோருக்கெல்லாம், சோதனை வருகிறது—போர் வருகிறது இதிலே தெரிந்துவிடும், சிலர் ஏன்ஒதுங்கினர் என்ற சூட்சமமெல்லாம், என்று கூறப்படுகிறது. ஆம்! அறப்போர் தொடுத்தால்தான், சோதனை வந்தால்தான், சூட்சமம் தெரியும்—நிச்சயம் தெரியும். ஆனால் 'பார்த்தீர்களா பயல்களை! போரில்

செத்த வடமொழிக்கு சிங்காரிப்பு ஏன்?

சேரவே காணோமே" என்று பிறர் கூறக்கூடிய நிலையில் இளைஞர் எவரும் இருந்துவிடமாட்டார்கள்—இலட்சியத்தில் பற்றும், அறப்போரில் ஈடுபட்ட அனுபவமும் கொண்ட எந்த இளைஞரும், இந்தச் சோதனையிலே தவறிவிட மாட்டார்கள். மாறாக, ஒதுங்கியிருந்தது இதனால்தான் போலும்—போர் என்றால் முன்னுக்கு வருகின்றனர்—சீர்வரிசை பெறுவதற்கு வாராதுபோயினுங்கூட, போர் என்றால், அழைப்புக் கிடைக்காமலும் வருகிறார்கள்—என்றுகூறும்படியானநிலையில்தான், எந்த இளைஞனும் நடந்துகொள்வான். இதை அறப்போர் தொடுத்ததும், அறிந்து கொள்ளலாம்!

ஒதுங்கி நிற்பவர்கள் — வேறு இடத்தில் இருப்பவர்கள்—எதிர்பாராத இடங்களிலிருந்து வந்து சேருபவர்கள்—என்று இம்முறையிலே, படைவரிசை விரிவடையும், பலமடையும், போர் என்றால். ஆட்சியாளர்கள் அந்த அற்புதக் காட்சியைக் காணவேண்டும். தடை செய்யப்பட்ட 'போர் வாள்'—தடை செய்யப்பட்ட 'இராவண காவியம்'—திணிக்கப்படும் 'இந்தி' இவைகளுக்கெல்லாம் ஒரே பதில்தான் உண்டு—அறப்போர்! அறப்போர்!!

இந்த ஆட்சியாளர்கள், தமக்கு யாரும் எதிர்க்கட்சி இல்லை என்ற எண்ணத்தால் இறுமாந்துள்ளனர். உண்மையும், அவ்விதமாகவே இருக்கிறது—எதிர்க்கட்சி இல்லை. சட்டசபையிலேயே, தூங்குபவர்களைத் தட்டி எழுப்பக்கூட ஆள் இல்லை—அந்த அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது. கம்யூனிஸ்டுகளையோவேட்டையாடி ஒழித்துவிடுவது என்ற அகில உலகத்திட்டத்தின்படி, இங்கேயும் ஏறக்குறைய அடக்கியாகிவிட்டது. பாட்டாளிகளுக்கும் உழவர்களுக்குப்பகல் பட்டினியும் இராப்பட்டினியும்மாலைநேரத்தில்,காமராஜ்—சர்தார் வேதரத்னம் ஆகியோரின் உபதேசமும் இருந்துவருகிறது. போலீசும் பட்டாளமும் இருப்பது போதாதென்று, புதிய புதிய அவசர சட்டமும் போட்டு ஆட்சியாளர்கள், புதியபலம் தேடிக்கொண்டவண்ணம் உள்ளனர்.

பாமர மக்களிடம் பயமும் பாசமும் ஏற்படுத்தி, முக்கியமான பிரச்னைகளை மூடிவைக்கத் தந்திரம் செய்து, காஷ்மீரைக் கவனி! நிஜாம் போகிற போக்கைக் கவனி!—என்று கூச்சல் குண்டுகளை வீசுகின்றனர். காஷ்மீர் பிரச்னை கலக்கத்தையும், நிஜாம் போக்கு கவலையையும் தருவது உண்மையானால், இவைகள் முன்னால் இருக்கும்போது, ஏன், மூலையில் கிடக்கும் இந்தியைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு கூத்தாடவேண்டும். முக்கியமான பிரச்னைகளைக் கவனிக்க வேண்டாமோ!

போதுமான அரிசி இல்லை—கேட்டால், மக்காச் சோளம் தின்னு என்கிறார் மந்திரியார்.

ஏனய்யா அரிசி கிடைக்கவில்லை, என்று கேட்டால், மழை இல்லை என்று கூறுகிறார் காங்கிரஸ் தலைவர்.

ஏனய்யா மழை இல்லை என்று கேட்டு, முதலமைச்சர் தாமாகவே ஓர் விசித்திரமான காரணமும் கூறிவிட்டார். ஒழுக்கம் இல்லை, எனவே மழை இல்லை — இது முதலமைச்சரின் வாயிலிருந்து உதிர்ந்த முத்துகள். முதலமைச்சராக இருப்பானேன்—எங்காவது மூலைக் காளிக் கோயிலிலே பூஜாரியாக அமரலாமே. இப்படிப்பட்ட இலட்சணமானபதில்களுக்கு அங்கு, நல்ல மதிப்புக் கிடைக்குமே என்று கூறத் தோன்றுகிறது. ஆனால் ஓமாந்தூரார் ஓரளவுக்குத் திராவிடப் பண்புடன் உள்ளவர் என்று கூறுகிறார்களே, என்ற எண்ணம் வந்து, நம்மைத் தடுக்கிறது. கேட்க, எதிர்க்க யாரும் இல்லை, யார் துணிந்து கேட்டாலும் அடக்கிவிடச் சட்டமும், சட்டம் தரும ஆயுதமும் இருக்கிறது; பாமரரைப் பசப்ப, பத்திரிகை பலம் இருக்கிறது, என்ற காரணத்துக்காக, இவர்கள் எப்படி வேண்டுமானாலும், ஆண்டு கொண்டிருப்பது, அனைவரும் நாமென்ன செய்வது என்று இருந்துவிடுவது என்று நிலைமை வளர்ந்தால், அதற்குப் பெயர், பாசீசம்தானே! பாசமும் பயமும் ஒன்று கூடினால் பிறப்பது பாசீசம்—அது பாமர மக்களைப்பாழ்படுத்தும்நஞ்சு. நம்மை அந்த நஞ்சு கொல்லா முன்னம் நாம் அந்த நஞ்சினை நசுக்கியாகவேண்டும். பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தோழர்களை, அந்தப் பாசீசம் படாத பாடுபடுத்திற்று. தலைவர் திரு. வி.க.வை, அந்தப் பாசீசம், வீட்டிற்குள் அடைத்து வைத்தது. கோவைத் தொழிலாளர்களின்குப்பியில் நெருப்பைக்கொட்டிற்று, அந்தப் பாசீசம். உழவர்களின் உள்ளத்தில் ஓராயிரம் ஈட்டிகளைச் சொருகுவதுபோலத் தொல்லை தந்தது அந்தப் பாசீசம். அதன் கொடுக்குகள், இங்கு இல்லை, ஒரு இடத்தில் இல்லை - இந்தியபூபாகம் முழுவதும் பரவி இருக்கிறது. ஒரு பத்துக்குடும்பத்தார், இட்டது சட்டம், நினைத்தது நியாயம், என்ற நிலைமை ஏற்படுத்திவிட்டது. சமதர்மத்தை, சம உரிமையைக் கேலிக்குரிய பேச்சாக்கிவிட்டது. புல்லை வீசிவிட்டோம் கீழே; இனி வாளை எடுத்திடுவோம், என்று வறட்டுத் தலையரும் கூவிடும் நிலைபிறந்தது எதனாலே! செத்த வடமொழிக்கு, சிங்காரிப்புகள் நடப்பது எதனாலே! ஆரிய நாகரிகம் அகிலமெல்லாம் பரவுக என்று முன்ஷிகூறியது எதனாலே! ஓமந்தூராரும் ஈரோட்டாரின் கையாள்தான் என்று பித்தர் சிலர் பேசத்தொடங்கியது எதனாலே! சென்னைக் காங்கிரஸ் மந்திரி சபை, காங்கிரசின் கொள்கைக்கே மாறாக நடக்கிறது என்று மேலிடத்துக்குச் சாடிசொல்லச் சிலர்கிளம்பியது எதனாலே!—இவை, யாவும் ஒரே காரணத்திலிருந்து கிளம்பும் பலரகமான நிலைமைகள்—அந்தக் காரணம் தான், நாட்டிலே வளர்ந்துள்ள பாசீசம். பாசீசத்தைநாடாளவிட்டு விட்டு, பதுமைகளாக வீடுகளிலேஇருப்பதைவிட, சிறைகளில் வாடுவதும், வேலாயுதங்கள் போல மரக்கிளைகளில் தொங்குவதும்கூட, விடுதலை விரும்பிகளுக்கு, மேலானதாகத் தோன்றும். அவனாசியார், இத்தகைய மன எழுச்சியை ஊட்டுகிறார் — அறப்போருக்கு அழைக்கிறார்.

—●—

அறிவிப்பு

10—7—48-க்குள் பாக்கி அனுப்பத் தவறும் ஏஜண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்புவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்
"திராவிட நாடு"

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்

[13-6—48 தொடர்ச்சி]

போலீசாரிடம் பிடிபட்டபோது, முத்துராமலிங்கர், சொன்ன வாசகம், என் மனதிலே ஏதோ ஒருவிதமான வேதனையைக் கிளப்பிவிட்டது. அவனுடையபோக்குக் கண்டு, நான் கோபப்பட்டேன் முதலில். வலிய வலியச் சண்டைக்கிழுத்தான்; வம்பு தும்பு பேசினான்; முரட்டுத்தனமாகவே நடந்துகொண்டான்; இதனால் அவன்மீது எனக்குக் கோபந்தான் பிறந்தது. இளைய பூபதியின், உயர்ந்த அந்தஸ்தைப் பற்றி ஒரு துளியும் கவலைகொள்ளாமல், மட்டு மரியாதையின்றி அவரிடம் பேசினான் என்பதுபற்றி எனக்குக் கோபந்தான். ஆனால் அவன்மீது, ஐயர் அபாண்டமான பழி சுமத்தி, போலீசாரிடம் பிடித்துக் கொடுத்தபோது, அவன் ஒரு புதுமனிதனாகி விட்டான். பதறவில்லை—பயப்படவில்லை—ஐயர்மீது பாயவில்லை—பூபதியை ஏசவில்லை—மிக மிகத் தைரியமாக நடந்து கொண்டான்—அலட்சியமாகப் பார்த்தான், ஐயரை! அந்தப்போக்கு எனக்கு ஆச்சரியமூட்டிற்று—அவனுடைய பேச்சோ, என் மனதிலே சொல்லொணாத வேதனையை மூட்டிவிட்டது. இதுதான் இவர்கள் வேலை!—என்று அவன் கூறின வார்த்தைகள் ஒவ்வொன்றும், பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டுகள் போல என் காதில் பாய்ந்து, மனதிலே தங்கி, வேதனையை விளைவித்தன. நிறுத்தி, நிதானமாக, பதறாமல், பயப்படாமல், சொன்னான், இதுதான் இவர்கள் வேலை என்று. சொன்னதும் எனக்கேற்பட்ட வேதனை, சிலவிநாடிகளுக்கெல்லாம், வெட்கமாக மாறிவிட்டது. உண்மைதானே! அவன் அச்சமின்றி, வெட்டு ஒன்று துண்டு இரண்டெனப் பேசுகிறான்—மனதிற் பட்டதைக் கூறுகிறான்—வீரமாகப் போராடுகிறான்—பணம்படைத்தவர் என்பதற்காக; ஒருவரிடம் வளைவதோ குழைவதோ கூடாது, அது ஆண்மையோ அறிவுடைமையோ ஆகாது என்ற கொள்கையைக் கொண்டவனாக இருக்கிறான்—கோபமூட்டக் கூடியபடி பேசுகிறான் என்றபோதிலும், வஞ்சகனல்ல—உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவனல்ல—பசப்பிப் பேசி அதனால் இலாபம் பெற வேண்டுமென்று எண்ணும் கீழ்த்தரக் குணம் கொண்டவனல்ல—சூது, சதி செய்பவனல்ல—ஆயினும், அப்படிப்பட்டவனை, அவன் பேசுவது தவறு என்று எடுத்துரைக்க வகையற்று, அவனுடன் வீரமாகப் போரிட்டு வீழ்த்தவும் வகையற்று, அவனை, வஞ்சகமாகத் தானே வீழ்த்தினோம், காரசாரமாகப் பேசினான்-கண்களில் பொறி பறக்கப் பேசினான்—கட்டுக்கு அடங்காது பேசினான்—காளை போலத் துள்ளினான்—தாக்கினான்—எல்லாம் சரி, ஆனால் அவன் கள்ளனல்லவே! அவன், கள்ளன், ரயிலில், ஜெமீன் பூபதியின் பணப் பெட்டியைக் களவாட முயற்சித்தான் என்று சூதாகத்தானே கூறி, அவனைப் போலீசில் சிக்கவைத்து விட்டோம்—இவன் வீணாக வாதாடினான், போராடினான், இவனை அடக்க எங்களால் முடியவில்லை, இவனை அப்புறப்படுத்துங்கள், இவன், எங்களோடு சேர்ந்து பிரயாணம் செய்தால், மேலும் ஏதேனும் தொல்லை தருவான், என்று நேர்மையாகக் கூறி இருக்கலாம், போலீசாரிடம். ஆனால், ஐயர் சொன்னது அதுவல்லவே! நானும் இளையபூபதியும், அவருடைய அபாண்டத்தைக் கேட்டுக்கொண்டிருந்தோம்—மறுக்கவில்லை—இலேசாக மகிழ்ச்சிகூடக் கொண்டார் இளையபூபதி. ஐயர் மதி மிக்கவர் என்று எண்ணி-ஆர அமர யோசிக்கும்போதல்லவா, நாங்கள், எவ்வளவு வஞ்சகமாக நடந்துகொண்டோம் என்பது தெரிந்தது. நான் வருத்தமடைந்தேன். இளையபூபதிக்கும் வருத்தம்—ஆனால் காரணம் வேறு. "பயலைச், சரியானபடி உதைத்துப் பாடம் கற்பித்திருக்க வேண்டும்—பல்லை உதிர்த்திருக்க வேண்டும்" என்று கோபத்தோடு பேசினார்—"யாரை, அந்த மண்டைக் கர்வியையா! யார், தாங்களா? ஏன்! பயலுக்கு, இப்போது, என்ன சமாராதனையா நடத்தப் போகிறீர்கள்! போடு போடுன்னு போட்டு, பின்னி எடுத்துவிட மாட்டாளா போலீசிலே. இலேசிலே விடமாட்டா—இப்படிப்பட்ட தறுதலைப் பயல்களைத் தண்டிக்க அவா இருக்கும் போது, தாங்கள், ஏன் சிரமப்படவேணும்." என்றார் ஐயர்—"அடிப்பார்களா?"—என்று நான் கேட்டேன்—"அடி கொடுப்பதோடு விடுவாளோ—கேசும் போடுவா—தண்டனையும் கிடைக்கும்—இரண்டு வருஷத்துக்குக் குறையாமல். பயல், இப்போது பெரிய லீடர் என்றல்லவா எண்ணிக்கொண்டு கிடக்கிறான்-பொதுஜன சேவையென்றோ அவன் செய்யறது, பொது ஜன சேவை—இனி என்ன ஆகும் தெரியுமோ—ரயில் திருடன்னு பட்டம் கிடைக்கும்-பயல் பெட்டிப் பாம்புதான்—இப்படிப்பட்ட பயல்களை மட்டந் தட்டாவிட்டா, நாடு, காடான்னா போகும். மட்டு மரியாதை துளி உண்டா—மாட்டினான் சரியா—" என்று ஐயர், விளக்கலானார்—தமது வீரத்தை என்று அவர் எண்ணிக்கொண்டார். எனக்கு அவர் பேச்சு, வீரமாகத் தெரியவில்லை. அவர் பேசப் பேச, எனக்கு, முத்துராமன் சொல்லிவிட்டுப் போன வாசகந்தான், மனதைக் குடைந்தபடி இருந்தது. போலீசாரிடம் சிக்கி அடி உதைபட்டு, வழக்கு ஏற்பட்டு அதனால் தண்டனையும் பெற்று, வதைப்படுவதோடு, அவனுடைய பொதுவாழ்க்கையுமல்லவா, பாழாகிவிடும் என்பதை எண்ணியபோது உண்மையாகவே, வருத்தமாக இருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகுதான்,

நான் மீண்டும் முத்துராமனைச் சந்தித்தேன், ரயில் சம்பவத்துக்குப் பிறகு — அப்போதுதான் அவன் சொன்னான், தனக்கு ஒரு விபத்தும் நேரிடவில்லை என்பதையும், போலீசார் தன்னை மிரட்டியதோடு, சம்பவம் முடிந்துவிட்டதாகவும். நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

முத்துராமனிடம் சண்டைக்கு நிற்கவேண்டி நேரிட்ட, சம்பவத்திற்குப்பிறகு, எங்கள் பிரயாணத்தில், வேறு குறிப்பிடத்தக்க சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. நேரே டில்லி சென்று அங்கு ஐயரின் ஏற்பாட்டின்படி ஒரு ஓட்டலில் தங்கினோம் — காங்கிரஸ் மாநாடு, நடைபெறுவதற்குச் சில நாட்கள். இருந்தன. டில்லியில் தங்கி, பிரபலஸ்தர்களைக்கண்டு பேசியல்லவா, பூபதிக்கு, ஆதரவு திரட்டவேண்டுமென்றார் ஐயர் — அதற்கான பல காரியங்களை அவர் கவனித்துக் கொண்டிருந்தார் — நானும் இளைய பூபதியும் டில்லி நகரிலே உல்லாசமாக உலவியும், கடைவீதி சென்று, விதவிதமான சாமான்களை வாங்கி மகிழ்ந்தும், சினிமாக்கள் பார்த்துக் துக்களித்தும், பொழுது போக்கினோம். ஒருநாள் ஐயர், "பூபதி! ஒரு விசேஷம்" என்ற பீடிகையுடன், பேச்சைத் துவக்கினார்.

"இமாசலத்திலே இருபதாண்டுகள் தவம் செய்து வரப்பிரசாதம் செய்த ஒரு மகான் இங்கு, மானச கோகுலம் அமைத்து, நடத்திக் கொண்டு வருகிறார். மானச கோகுலத்திலே, யார் வேண்டுமானாலும் போகமுடியாது— ஒருமுறையாவது போகிற பாக்யம் பெற்றவாளோ, பெறுகிற புண்யத்துக்கு அளவு கிடையாது." என்றார்.

ஐயர், இளையபூபதியை அழைத்து வந்ததோ, அரசியலில் பெரிய இடம் கிடைக்கச் செய்வதற்கு — இப்போதோ யாரோ மகானுடைய அருளை வாங்கித்தருவதாகக் கூறுகிறார்—இதற்கு, டில்லிவரவேண்டுமா —மகான்களுக்கு என்ன, பஞ்சமா, நமது பக்கத்திலே — என்று நான் எண்ணிக்கொண்டேன் — கேட்கவில்லை—ஏனென்றால் ஐயர், மிக ஆர்வத்தோடு, அந்த மகானைப்பற்றிப் பேசலானார்.

"மானசகோகுலம், அமாவாசைக்கு அமாவாசைதான்நடைபெறுகிறவாடிக்கை. ஊரெல்லாம், உலகெல்லாம் அமாவாசையன்று இருள்—ஆனால் இந்தமகானுடைய,மானசகோகுலத்தில் அன்று பௌர்ணமி. அதாவது, அன்று ஆஸ்ரமம் ஜோதிமயமாக இருக்குமாம். இரவு எட்டு மணிக்கு, கோகுலம் சென்றால், பத்துமணி வரையிலே, பூஜாக்கிரகவாசம் — அந்த இரண்டுமணிநேர பூஜை முடிந்ததும், மானசீக கோகுலம், ஏற்பட்டுவிடுகிறதாம்— அதாவது, பூஜாக்கிரகவாச விசேஷத்தால் அதிலே ஈடுபட்ட புருஷாளெல்லாம், கிருஷ்ணபரமாத்மாவின் பிரதி பிம்பங்களாகிவிடுகிறாளாம்—ஸ்திரீகளெல்லாம், கோகுல கோபிகைகளாகிவிடுகிறாளாம் — ஜோதிமயமான மண்டபத்திலே தங்களை மறந்து ஆடிப்பாடிக்கொண்டிருப்பாளாம், சூரியோதயம் வரையில். பிறகு, பூஜாக்கிரகம்சென்று, பழையபடி சுய உணர்வு பெற்று, வீடு திரும்புவது, முறையாம். இந்த மானசீக கோகுலத்திலே ஒரு முறையாவதுபோக, மகாராஜாக்களெல்லாம், அந்த மகானிடம் பண்டியிட்டுக்காத்துக்கொண்டிருப்பாளாம். மாங்காட்டு மணின்னு, எனக்கொரு சிநேகிதன் உண்டு —பால்ய சிநேகம்—அவனுடைய மருமான், இந்த ஆஸ்ரமத்திலே வேலையில் இருக்கிறான் — அவன் சொன்னான் சகல விவரமும் — சொன்னதோடில்லை — நாம், இந்த அமாவாசையன்று, மானசீககோகுலம்போக, ஏற்பாடும் செய்துவிட்டான்" என்றார்.

ஐயர், சொன்னது கேட்டு, எனக்கு ஒன்றும் அளவுகடந்த பிரியம் ஏற்படவில்லை; இளையபூபதிக்குமட்டும், ஆர்வம் அளவுக்கு மீறிப்போய்விட்டது-ஐயர் இதை அறிந்து, மானசீக கோகுலத்தைப்பற்றிய விவரங்களை மேலும் மேலும் வர்ணனைகளுடன் பேசலானார். மிகவும் இரகசியமாக இந்த ஏற்பாடு நடைபெறுவதால், பலருக்குத் தெரியாது என்றார்.

"அதுசரி-மகான்-பூஜை-விசேஷ பலன்,என்றெல்லாம் பேசுவதிருக்கட்டும்-புருஷர்களெல்லாம்கிருஷ்ண பரமாத்மா, பெண்களெல்லாம் கோபிகா ஸ்திரீகள், என்றாகிவிடுவார்கள் என்றால், அர்த்தம் என்ன-யோசித்துப் பார்த்தால், ரசாபாசமாக அல்லவோ இருக்கிறது" என்று நான் கேட்டுப்பார்த்தேன். "அது, அவாளவாளுடைய மனப்பக்குவத்தைப்பொறுத்தது" என்று பொதுவாகப்பதிலளித்தார். எனக்கு அதற்கு மேல், அந்த விஷயமாகக் கிளற விருப்பமில்லை — என்யோசனை எல்லாம், எப்படியாவது, இந்த இடத்துக்குப்போகக்கூடாது-தடுத்துவிடவேண்டும், என்பது-எனக்கும் ஐயருக்கும், இதுசம்பந்தமாகப்போட்டி —பலபரீட்சை நடந்தது — 'எவனெவனோ வருவான், எவளெவளோ வருவாள்-இது என்ன ரசாபாசம்' -இது என்வாதம்; "யாரார் வருகிறா தெரியுமோ- எப்படிப்பட்டவாளெல்லாம் வருகிறா தெரியுமோ!"- இது ஐயரின் தூபம். என்னை, ஐயர், தோற்கடித்தார்-மூவரும், மானசீக கோகுலம் சென்றோம்.

பெரிய அரண்மனை, அந்த இடம் —யாரோ ஒரு ராஜாவுடையதாம். வெளியே, போர்டு எதுவும் கிடையாது—கட்டடத்தின் முன்பகுதியிலேயும், மானசீககோகுலம், என்பதற்கான அடையாளம் எதுவும் கிடையாது, பழைய இரும்புச் சாமான்கள், விற்குமிடமாக இருந்தது—ஆனால் இங்குள்ள காவற்காரனிடம், ஏதோ ஓர் அடையாளப் பில்லையைக் காட்டியதும், ரகசிய வழியாக, அவன் அழைத்துச் செல்கிறான், மானசீககோகுலத்துக்கு. உள்ளே நுழையும்போதே, எனக்கு அருவருப்புத்தான்—சுமார் நாற்பது ஐம்பதுபேர் இருந்தனர்—சாமான்யர்களல்ல — சீமான்கள், சீமாட்டிகள். பூஜை அறைக்கு, நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம்— அங்கு மிக உயர்தரமான முறையிலே விருந்து—இனிப்புப்பண்டங்கள் ஏராளம்—பானம், ஏதோ ஒரு வகையானது, பருகப் பருக இனித்தது, அதேபோது, போதையும் தந்தது—அந்தப்பூஜை அறையிலிருக்கும் போதே, நிலை, கொஞ்சம் கொஞ்சம் தவறஆரம்பித்துவிட்டது—ஒருவரை ஒருவர், கிருஷ்ணா — கிருஷ்ணா — என்றுதான் அழைத்துக் கொள்வது— பாடத்தெரிந்தவர்கள் பாடினார்கள்— இந்த நிலையிழக்கும் காரியம் நடைபெறும் போது 'மகான்'—வந்தார்— அவர்வருவதற்கு முன்பு, புல்லாங்குழல் ஊதப்பட்டது—வந்த மகானின் முகம், கிருஷ்ண வேஷம் போடப்படிருந்தது—அவர் வந்ததும் அனைவரும், காலில் விழுந்து வணங்க, அவர், அந்தப் பூஜாக்கிருஹத்திலே உள்ள ஒரு இரகசியவழியாக வேறோர் மண்டபத்துக்கு அழைத்துச் செல்கிறார் —அங்கு அருமையான வாத்யவகைகள்— தீபாலங்காரம்—திவ்யமான மணம்-

(16-ம் பக்கம் பார்க்க)

அறப்போருக்கு அழைக்கிறார்!

அறப்போருக்கு அழைக்கிறார்! ஆகாத இந்தியை நுழைக்கிறார், ஆணவத்தைத் துணையெனக்கொண்டவர்களின் சதிப் பேச்சிலே மயங்கி, அவினாசியார், கட்டாய இந்தியை நுழைக்கிறார், களம்வா தமிழா! என்று அழைக்கிறார். கல்லறை இருக்கிறது சென்னையில்! மொழிப் போரில் உயிர்நீத்த உத்தமர்களின் கல்லறை!

காளைகள் பலர், பலப்பலர் உள்ளனர், கட்டாய இந்தியை எதிர்த்துக் கடுஞ்சிறை சென்று, கல்உடைத்தவர்கள், செக்கும் இழுத்தவர்கள், சமையலறையிலிருந்து நேரே சிறை நோக்கிச் சென்ற, சீலமிகு செந்தமிழ்த்தாய்மார்கள் உள்ளனர்!

சிறையிலே, தாயுடன் இருந்து, குழந்தைப் பருவத்திலேயே சிறைக்கஞ்சாளாகி, வளர்ந்த குழந்தைகள், சிறுவர் சிறுமியராக உள்ளனர்.

காவி அணிந்தோர் — கலைபயின்றிருந்தோர் — காடுகழனி உழுது கொண்டிருந்தோர் அனைவரும், களம் வந்தனர்— அற்பமென்போம் அந்த இந்திதனை அதன் ஆதிக்கம் தன்னை வளரவிடோம் என்று முழக்கமிட்டுக்கொண்டு.

ஆசிரியர் திருமலைசாமியும் அஞ்சா நெஞ்சுடைய அழகர்சாமியும், தமிழர் பெரும்படையை நடத்தி வந்தனர். சென்னைக் கடற்கரை, தமிழரின் இல்லமாகி விட்டது. பாரதியார்பரணி — விசுவநாதம் வீரமுரசுஒலிக்கும் இடமாகி விட்டது. திருமணவீட்டு அழைப்பு போல, சென்னைத் தாய்மார்கள், தெருத்தெருவுக்கும் சென்று,— செந்தமிழைக் காப்பதற்குச் சேனையொன்று தேவை! பெரும் சேனை ஒன்று தேவை!—என்று சிந்து பாடினர். பெரியார் பெரும்படை உருவெடுத்தது,

டாக்டர் தருமாம்பாளம்மையார், மலர்முகத்தம்மையார், பண்டிதை நாராயணியம்மையார், மூவலூர் இராமாமிருதத்தம்மையார், இளம்பினர்—பவனிவந்தனர், செந்தமிழ் நாட்டில், இவைகள் எல்லாம், கனவில்கண்ட காட்சிகளோ!—என்று எண்ணிடவேண்டிய விதமாக, ஆண்டு சில சென்று விட்டன. அறப்போர் நடாத்தியதால் கிடைத்த ஆர்வம், அடியோடு, மறைந்து போய்விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் போலும், அன்பர் அவினாசியாருக்கு — ஆகவே தான் —அறப்போருக்கு அழைக்கிறார். இந்தி இஷ்டபாடந்தான்—தமிழகத்தில் எவரும்—அவர்மீது சிலர் சீறினர்—உடனே அமைச்சர் மாறினார் —இங்கும் இந்திகட்டாய பாடந்தான், என்று கூறுகிறார்—தமிழரைத் துச்சமென்றெண்ணி, வலிய வம்புக்கு நிற்கிறார். அறப்போர் நடாத்துப்படி அழைக்கும் அவினாசியாருக்கு, அந்தநாள் நிகழ்ச்சிகள் அவ்வளவாகத் தெரியாது. ஆச்சாரியார் அறிவார் அனைத்தும்—ஆனால் அவருக்கோ நேரம் இராது, அவினாசியாரிடம் பேச—சீனத்தூதருடன் சிற்றுண்டியும், நேபாளத் தூதருடன் விருந்தும், திபேத்திய கன்னியரின் திருநடனமும், நிஜாம் தூதருக்குப் பேட்டியும் தரவே, அவருக்கு நேரம் போதாது—நினைப்பிலே திமிர் நடுக்கம் கொள்ளும் அவினாசியாரிடம், பழங்கதை பேச, நேரம், எப்படிக் கிடைக்கும்!

விஷயம் தெரியாததாலும், நிலைமை புரியாததாலும், அமைச்சர், இந்த ஆகாத திட்டத்தைப் புகுத்துகிறார்—அறப்போருக்குத் தமிழரை அழைக்கிறார்.

தமிழர், அவினாசியாரின் அழைப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்கப் போவதில்லை! தமிழர், அறப்போர் புரிய, என்றுமே தயங்கினதில்லை—சேரன் செங்குட்டுவன் காலத்திலிருந்தே, தமிழர் தயங்கினதில்லை, தமது மொழிக்காகப் போரிட. தமிழர், தமது மொழிமூலம் கிடைக்கும் வாழ்க்கை வழியின் மேம்பாட்டினை நன்கு அறிவர்—எனவேதான் அந்த மொழிக்கு இழுக்கு வருகிறதென்று தெரிந்தால், கூட்டினைவிட்டு வெளிக்கிளம்பும் சிங்கங்களாகின்றனர். இம்முறையும், சரி, அறப்போர் புரியத் தமிழர் அஞ்சப்போவதில்லை. அந்த நாளில், தமிழருக்கும், தமிழ்மொழியைக்குலைக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும், இருந்த நிலையும், இன்றுள்ள நிலையும், தமிழர்நன்கு அறிவர். அன்றும், ஆட்சிப்பீடத்தில், நாம் இல்லை.

இன்றும் ஆட்சிப்பீடத்தில் நாம் இல்லை.

அன்று, தமிழ்மொழிக்குப் படைதிரட்டி, வெற்றிகாண, அறப்போர் தொடுத்தோம்.

இன்றும் தொடுப்போம்! தமிழரின் உள்ளம், பண்பட்டுள்ள இப்போது, அறப்போர், முன்பிருந்ததைவிட, மும்முரமானதாக இருக்கும். தமிழரின் வீரவரலாற்றுச் சுவடியில், மேலும் சில இதழ்கள் சேர்ப்போம்—பொன் எழுத்துக்கள் பொறித்திட, சீமானுமல்ல பூமானுமல்ல நாம்—செங்குருதியால் எழுதிக் காட்டுவோம், செந்தமிழைக் காத்திட அறப்போர் நடாத்தும் செய்தியை. அவினாசியாருக்குக் கூறுகிறோம், உமது அறைகூவல் ஏற்றுக்கொள்ளப்படும்—அறப்போர் துவக்கப்படும்—என்று. கடமையைச்செய்வதிலே எஃகுபோன்ற உள்ளமும், நீதி வழங்குவதிலே துலாக்கோல்போன்ற மனோநிலையும், எளியோர் விஷயத்தில் இளகியமனமும் இருத்தல்வேண்டும், ஒரு ஆட்சி பிறரால் போற்றப்படவேண்டுமானால்.

ஆட்சியைப் பிடித்துக்கொள்ள ஆஷாடபூதி வேஷமிட்டு நின்று, நல்

5-ம் பக்கத்தில்

இந்தி கட்டாயமாகத் திணிப்பதை எதிர்க்கிறேன்

பேராசிரியர் பாரதியாரின் கடிதம்

பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள், இந்தி, கட்டாய பாடமாக்குவதை எதிர்த்துக், கல்வி அமைச்சருக்கு 28-6-48ல் எழுதியிருக்கும் கடிதத்தின் சுருக்கம் கீழே தரப்படுகிறது:—

"இந்தியை மீண்டும் அமல் செய்வதை நான் ஆதரிக்கிறேனா என்று பலர் என்னைக் கேட்டுள்ளனர். இந்தி சம்பந்தமாக நான் தங்களுக்கு (கல்வி மந்திரிக்கு) எழுதிய கடிதம் பற்றிச் சில பத்திரிகைகள் கூறியிருப்பதே பலர் என்னைக் கேட்பதற்குக் காரணம். அந்தக் கடிதம் தங்களுக்கு வந்து சேர்ந்தது பற்றிக் கூட நீங்கள் அறிவிக்கவில்லை.

முதலில் விருப்ப பாடம் என அறிவிக்கப்பட்டு, தற்போது செயலளவில் மாகாண முழுதும் கட்டாயபாடமாக்கப்பட்டுள்ள இந்தியைப் பற்றி தாங்கள் கொண்டுள்ள புதிய கொள்கையையும் கருத்தையும் நான் ஆதரிப்பதாகப் பத்திரிகைச் செய்தி அபிப்பிராயம் ஏற்படுத்திவிடுமோ என நான் ஐயுறுகிறேன். இவ்வித அபிப்பிராயம் எனது தீர்க்கமான அபிப்பிராயங்களுக்கும் முடிவுகளுக்கும், நான் தங்களுக்குக்கடிதம் எழுதியதன் நோக்கத்திற்கும் நேர்மாறானது என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்வீர்கள். தெளிவில்லாமலும் ஐயுறவுக்கு இடந் தருவதுமான நிலையில் அக்கடிதம் பற்றிக் கூறுவதைக் காட்டிலும் அதை வெளியிடுவதே நலம் என நான் நினைக்கிறேன்.

இம்மாகாணத்தின் இதரமொழிப் பிரதேசங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கிய போதிலும், தமிழ் நாட்டில் அது விருப்பபாடம் தான் என்று தாங்கள் துணிவுடனும் விவேகமாகவும் அறிவித்ததற்காகத் தங்களைப் பாராட்டி 6. 6. 48ந் தேதி கடிதம் எழுதினேன்.

இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதை எதிர்க்கிறேன்; புதிய இந்தியாவில் அதை இஷ்ட பூர்வமான தேசிய பாஷையாகப் பிரசாரம் செய்வதை நான் எதிர்க்கவில்லை என்பதை தாங்களறிவீர்கள்.

இந்தி கட்டாய பாடமாக்கப்படும் என்பதற்கான அறிகுறியே முதல் அறிவிப்பில் இல்லாததால் உங்களது தாராளகொள்கையைத் தமிழகத்தார் வரவேற்க வேண்டுமென்று கூறினேன். ஆனால் இப்போதோ இம்மாகாண பள்ளிகள் எல்லாவற்றிலுமுள்ள இளைஞர்கள் மீது கட்டாயமாக 3 பாஷைகளைச் சுமத்தியிருப்பதிலிருந்து கல்வி சம்பந்தமான கொள்கைகளில் கூடக் காங்கிரஸ் மந்திரி சபையின் போக்கு எவ்வாறு இருக்கிறது என்பது தெரிகிறது.

இந்தியா முழுவதிலும் வேறு எங்கும் இவ்வாறு கட்டாயமாக 3 பாஷை சுமத்தப்படவில்லை."

என் வாழ்வு

14-ம் பக்கத் தொடர்ச்சி

ஆடவரெல்லாம் கிருஷ்ணபரமாத்மா—பெண்களெல்லாம் கோபிகைகள்—அவ்வளவுதான்—நடனம்—நடனம்—ரசாபாசம்! கூடுமானவரையில், நான், இளையபூபதியை விட்டுப் பிரியாமல், இருந்து வந்தேன். பல கோபிகைகளின் மீது என் கிருஷ்ண பரமாத்மாவின் பார்வை போயிற்று. நான் என் கிருஷ்ணனை ஜாக்ரதையாகக் கவனித்துக் கொண்டேன்—ஆனால் கடைசிவரையில் சாத்யமா! ஒரு, குறும்புக்காரக் கோபிகை, என் கூந்தலைப்பிடித்திழுத்துக் கீழே சாய்த்துவிட்டு, என்கிருஷ்ணனை, "கண்ணாவாடா, கண்ணின் மணியே! என் மன்னவாடா, மாதென்னைத் தேடியே"—என்று பாடிக்கொண்டே, அழைத்துக்கொண்டு போய்விட்டாள்—"ஆயாசம் ஏனோபெண்ணே! ஆனந்தம் கொள்வாய் நீயே" என்று, ஒரு கிருஷ்ணன் பாடிக் கொண்டே, என் கரத்தைப் பிடித்திழுத்தான்—ஆனால், 'மகான்' அங்குவந்தார்—அவர் அப்படி வருவது இல்லையாம். வந்தவர், என்னைத் தொட்டிழுத்த கிருஷ்ணனிடமிருந்து, என்னை விடுவித்தார் — விடுவித்தார் என்றால் எதற்கு! — அவர் என்னைத் தன் கோபிகையாக்கிக் கொண்டார் — அந்த மண்டபத்தைவிட்டு, என்னை வேறோர் இரகசிய வழியாக ஒரு தனி அறைக்கு, வேகவேகமாக இழுத்துச் சென்றார்—கிருஷ்ணா! விடு—கிருஷ்ணா, என்னை விடு—என்று நான் பதறினேன்; பதிலே பேசவில்லை — அறையின் கதவை, ஓங்கி அடித்துத் தாளிட்டுவிட்டு, அங்கு, மங்கலாக எரிந்து கொண்டிருந்த தீபத்தைப் பெரிதாக்கி, என்னைக் குரூரமாகப் பார்க்கலானார், மகான். நான் சற்றுப் பயந்து போனேன்.

தெரிகிறதாடி, கள்ளி!—என்றுகர்ஜித்தார் மகான். என் பயம் அதிகமாகிவிட்டது—நான் அலறினேன். அலறு—அலறு—அழு—அழு—எவ்வளவு அழுது என்ன பயன்—சத்தம் வெளியே போகாது—என்றான் அந்த மாபாவி.

நான், அந்த இடத்தை விட்டுத் தப்பித்துக்கொண்டோட, முயன்றேன்—முடியவில்லை.

ஒருமுறைதான் என்னை ஏமாற்றிவிட்டாய்—காதகி—இம்முறை முடியாது—அப்போது நான் முட்டாள்—உன் அடிமை—பஞ்சைப் பார்ப்பானாக இருந்தேன்—இப்போது நான், குரு—கோகுல குரு—என்று, கொக்கரித்தான். மற்றவர்களுக்குக் கிருஷ்ண பரமாத்மா என்று எண்ணம், பூஜையின் பலனாக ஏற்படுவது போல, இந்தப் பாவிக்கு, கம்சன் என்று எண்ணம் ஏற்படுகிறதோ, என்று நினைத்தேன்—ஆனால் கம்சன் என்ற எண்ணம் ஏற்பட்டால், கிருஷ்ணனை அல்லவா இம்சிப்பான்-இவனோ, என்னை இம்சிக்கிறானே, என்ன காரணம்—யார் இவன்—என்று எண்ணினேன்—உடல் படபடவென உதறிற்று.

எப்படி, நமது கோகுலம்! பேச்சு நடை, நொடிபாவனை, பேச்சு, குரல், சகலமும் மாறிப் போய் விட்டதே, அடையாளமே தெரியவில்லையே, என்று யோசிக்கிறாயா! யோசி! யோசித்துக்கொண்டே இரு!-என்று கூறிவிட்டுச் சிரித்தான், அந்தக் காதகன். நீ.......யார்.......என்று தடுமாறினேன், பேசவே முடியாமல். நானு.......வன், தெரியவில்லையா....என்று கூறிக்கொண்டே, கிருஷ்ண வேஷத்தைக்கலைக்கலானான்—நான்பயத்தை அடக்கிக் கொண்டு, யார் அந்த வேஷதாரி, என்று கூர்ந்து பார்த்தேன்-கிரீடம்—முகமூடி இவைகளை வீசி எறிந்துவிட்டு, என் எதிரே, நின்றான், கணபதி சாஸ்திரி.!

(தொடரும்)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street Conjeeveram.